அதிகாலையில் ஆத்ம சிந்தனை



அனுபவ விளக்கம் :

ஞானயோகி இரத்தின சற்குரு

துணை இணைப்பு : பவரோக நிவாரணி

பிறவியை ஒழித்து பேரின்ப முக்தி பெற விரும்புவோர் அனைவரின் கரங்களிலும் உள்ளங்களிலும் இடம் பெற வேண்டிய அத்வைத ஞானமன்றத்தின் ஞானநூல்கள்

1.	ஞானனுபூதி வேத போதம்	...	12-00
2.	ஞானேதயம்	...	4-50
3.	சும்மா இருக்கும்சுகம்	...	3-75
4.	ஆனந்த உலகம்	...	4-50
5.	குண்டலினி யோகப் பயிற்சி	...	4-50
6.	இறுதியில் மனிதன் எதை அடைவது	...	4-50

தேவையான நூல்களுக்குக் குறிப்பிட்ட தொகையுடன் ரூ1-00 சேர்த்து M.O செய்க. பதிவு தபாலில் பெற ரூ 5-40 சேர்த்து அனுப்புக. M.O. அனுப்ப வேண்டிய முகவரி:

தவத்திரு, H. ரெங்கசாமி *ஆசிரியர்*
8A, 5,வது தெரு, கிருஷ்ணபுரம் காலனி,
மதுரை—625 014

தவயோகி, N வெங்கட்ராமன்,
குருநாதர் அத்வைத ஞான மன்றம்
கொளிஞ்சிவாடி, (வழி) *தாராபுரம்—638 673*

தவத்திரு. கு பெருமாள்
71, பி.வி.கே சாலை, பொத்தனூர்
சேலம் மாவட்டம்—638 181

ஆதிகாலையில் ஆத்மசிந்தனை
(பிராத ஸ்மரண ஸ்தோத்திரம்)

மூலம்

ஸ்ரீ ஆதிசங்கர ஜகத்குரு

அனுபவ விளக்கம் :

ஞானயோகி இரத்தின சற்குரு

துணை இணைப்பு :

பவரோக நிவாரணி

நீலகிரி காந்தல் ஸ்ரீ ஓம் பிரகாச சுவாமிகளின் சீடரும், அத்வைத ஞான மன்ற நிறுவனரும் எங்கள் ஞானபிதாவுமான **ஞானயோகி இரத்தின சற்குரு நாதரின்** 83வது ஆண்டும் எங்களை வழிநடத்தி செல்லும் தற்போதுள்ள குருநாதரான **தவயோகி N. வெங்கட்ராமன்** அவர்களின் 61-ஆம் ஆண்டும் கூடிய துவக்க விழா நினைவு மலர்

பதிப்பளார்: தவத்திரு. H. ரெங்கசாமி
8-A, ஐந்தாவது தெரு,
கிருஷ்ணபுரம் காலனி
மதுரை—625 014

14—8—1987

அதிகாலையில் ஆத்ம சிந்தனை
ஞானயோகி இரத்தின சற்குரு

முதல் பதிப்பு 1967
இரண்டாம் பதிப்பு 1987
பதிப்புரிமை அத்வைத ஞான மன்றம்

விலை : ரூ. 4-75

பதிப்பாளர் : தவத்திரு. H. ரெங்கசாமி
8-A, ஐந்தாவது தெரு
கிருஷ்ணபுரம் காலனி,
மதுரை—625 014

அத்வைத ஞானமன்ற வெளியீடு : 27

அகில அத்வைத சங்கரர் வாழியே !
அசல பீட வித்யாரண்யர் வாழிய !
விகித ஓம்பிரகாசரும் வாழியே !
விமல இரத்தின சற்குரு வாழியே !

அச்சிட்டோர் :
கண்மணி பிரிண்டர்ஸ்,
தல்லாகுளம், மதுரை-2.

73-1

எல்லாப் புகழும் இரத்தின சற்குரு ஒருவருக்கே!

நூன்முகம்

அத்வைதம் என்றவுடன் அது நம் போன்ற இல்லற-சம்சாரிகளுக்கு ஆகிறகாரியமா? அதை அனுசரிக்க முடியுமா? என, மலைக்க வேண்டாம். துவித உருவ பாவனைகளைவிட அத்வைத பாவனை எளிமையானது. இப் பிறவியிலேயே முத்திப்பதம் பெறலாம் அவ்வழியை, தவஞானச் செல்வர் தாயுமானவ சுவாமிகள் அனுபவ வாயிலாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். ஆன்மநேயரே! கவனியுங்கள்

"ஆதலின், எனக்குஇனி சரியை யாதிகள் போதும்
யாதொன்று பாவிக்க 'நான் அது ஆதலால்' உன்னை
நான் என்று பாவிக்கில் அத்துவித மார்க்கம் உறலாம்."

அன்பரே! தாயுமானவர் அருளிய அந்த 'உன்னை' நான் என்று பாவிக்கில்' என்கிறாரே? அந்த 'உன்னை' என்னும் பதம் எதைக் குறிக்கிறது? அந்த ஞானச் செல்வரே அதையும் அருளிச் செய்திருக்கிறார்.

"ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள் செய்
எந்தைநீ குறையும் உண்டோ? இகம் பரம் இரண்டினிலும்
உயிரினுக்கு உயிராகி எங்கும் நிறைகின்ற பொருளே".

அவர் அருளிய உன்னை எனும் பதம், விளங்கிற்றா? இகம் பரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி எங்கும் நிறைகின்ற பொருளான—சிவமே 'உன்னை நான்' என்று பாவிக்கில் அத்துவித மார்க்க முறலாம். அறிஞர்களே! அத்வைத மார்க்கம் எத்தனை சுலபமானது?

அதை அடையும் எளிய வழியை 'அதிகாலையில் ஆத்ம சிந்தனை' தெளிவுபட விளக்கி வைக்கிறது. அது மட்டுமன்று 'ஆதிசங்கரர் அத்வைதியா? அறுசமயவாதியா?' நமமைச் சிந்திக்க வைக்கிறது.

ஆத்ம ஞானியும் அத்வைத போதகருமான ஞானயோகி இரத்தின சற்குரு அவர்களின் அடிச்சுவடு பற்றி அத்வைத ஞான மார்க்க நெறி நின்று இப்பிறவியிலேயே இனிப்பிறவா முத்தி பெற்றுய்வோமாக! குருவே துணை!!

கொளிஞ்சிவாடி — தலத்திரு. N. வெங்கட்ராமன்.

14-8-1987 — குருநாதர்; அத்வதை ஞானமன்றம்

கோடிக்குற்றம் புரிந்தாலும் குருவின் பார்வை பட நிங்கும்!

இரண்டாவது பதிப்பின் சிறப்புரை

உண்மையான சாமியார்களைக் கண்டறிவது குதிரைக் கொம்பாகவுள்ள இந்நாளில் ஞானயோகி இரத்தின சற்குரு அவர்களைப் போன்று காவியுடையணிந்த ஒருவர் இல்லறத துறவியாக வாழ்ந்தது, தூலப்பார்வையுள்ளவர்களுக்கு ஒரு புரியாத புதிராகவே தோன்றும்.

ஞானயோகி என்றுல் அகக்கண் படைத்தவர்; அறிவை அணைத்தவர்; தன்னை அறிந்த சுட்டறிவுள்ளவர்: மயக்கம் தெளிந்தவர் என்று பொருள். 'வேண்டுதல் வேண்டாமை இலானே' ஞானம் பெற்றவர் எனலாம். பற்றற்றுத்தன் கடமையைச் செய்து முடித்தல் வேண்டும் இது கடினமான காரியம் தான். சீவாத்மா. விடுதலை பெற்று பரமாத்மா வுடன் ஒன்ற வேண்டுமானுல், அதற்குப் பற்றற்றுப் பணி புரிவது ஒன்றேதான் நேரிய வழியாகும்.

"காமத்தையும் சுாசாசையையும் வெல்கின்ற
அளவே மனிதர் மேலோரா கின்றனர்"
— [ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்]

ஆன்மாவைத் தொட்டுக் கேட்டு உணர முடியாது. அறிவால்தான் - சுட்டறிவால்தான் - அறிந்து கொள்ள முடியும். அதற்குப் பகுத்தறிவுக்கண் - ஞானக்கண் - துலங்கப் பெறுதல் வேண்டும். ஆன்மாவை எவ்வாறு பகுத்தறிவால் உணருவது? மனிதனது முடிவான நிலை என்ன? என்பதை விசாரித்தறிந்து சிந்திப்பதுதான் சுட்டறிவு.

"எதை அறிந்தால் அறிய முடிந்ததை அறிந்ததாகுமோ?
எதை அடைந்தால் அடைய முடியாததை அடைய முடியுமோ?"

அப்படிப்பட்ட பூரணத்வ நிலையே மனிதனது இலட்சிய மாகும்.

எந்த இடத்திலிருந்து ஆதியில் வந்தோமோ? அந்த இடத்தை அடைந்து அதுவாகி நிற்பதே முடிவான நிலை; அதுவே அழியாத இன்பம் நல்கக் கூடிய நிலை; சீவாத்மா பரமாத்மாவோடு ஒன்றி விடும் அத்வைத நிலை; சீவன் முத்தி நிலை.

அதற்குப் பயிற்சி யாது? வழி துறை என்ன? கர்மயோக வாயிலாக ஞானயோகம் புரிதலாகும். பற்றற்றுப் பணி புரிதல் - தன்னையறிதல் என்பதுதான் ஞான நூல்களின் முடிவு. அலையும் மனதை உடையவர்களுக்கு ஆத்ம தரிசனம் கிடைப்பது அரிது பற்றற்ற - நிஷ்காமிய கர்மம், ஞான யோகம் புரிகின்றவர்களுடைய மனம், ஒடுங்கி - சாந்தி அடைகிறது மனம் ஒடுங்கிய நிலையில் சத்வகுணம் நிலவு கிறது. சத்வகுணம் நிலவுங்கால் சீவாத்மா பரமாத்வை அணுகி நிற்கின்றது. சத்வ குணம் கடந்த நிலை எய்தும் போது, சுத்த சீவன் (ஆத்மா) பரமாத்மாவோடு கலந்து விடுகிறது.

ஞான நிஷ்டையில் தான் அறிவு ஆத்மாவோடு சம்பாஷிக் கின்றது. அதற்கு உதவக் கூடிய பயிற்சி ஆத்ம சிந்தனை ஆகும். விஞ்ஞான வளர்ச்சி மக்களுக்குத் தீமை பயக்காமல் நன்மை பயக்க வேண்டுமானல் ஆத்மீக வளர்ச்சி நாட்டில் மிகுதல் வேண்டும். அதிகாலையில் ஆத்ம சிந்தனை பயில்வதால் மக்களிடமுள்ள நல்ல ஞானத் தன்மைகள் வளர்ச்சியடைந்து நாட்டிற்கும், நமக்கும் நன்மை பயக்கும்.

ஆதலால்; தன்னை அறியும் தாகமுள்ள ஞான ஆர்வ முள்ளவர்களுக்கும், முமுட்சுக்களுக்கும், ஆத்ம தத்துவத்தை அறிய விரும்புபவர்களுக்கும் இந்நூல் மிகுந்த பயன் தரு மென்பது நிச்சயம்.

இதுபோன்ற ஞான அனுபவகளை நல்கிய ஞானயோகி யவர்களுக்கும், மக்கள் முத்திநெறி பெறக் கருதிப் பதிப்பித்த அத்வைத ஞானமன்ற அன்பர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றி உரித்தாகுக.

அன்பன்

கோபி
14 - 8 - 1987

தத்திரு. K.S. சுப்பிரமணியன் MSc
தலைவர் ; அத்வைத ஞான மன்றம்

இந்த எழுதுகோல் பிரம்மம்! எழுத்தும் பிரம்மம்! இதை எழுது
வோனும் பிரம்மம்! இதை வாசிப்பவனும் பிரம்மம்!
காணும் யாவும் பிரம்மத்தைத் தவிரபிரதிதொன்றுமில்லை !

பதிப்புரை

அறிவாற்றல் அமையப்பெற்ற அன்பர்களே !

அறிவுமயமாக இலங்கும் ஆன்மாவின் உண்மை இயல்பையும் பேரறிவாம் பிரம்ம சொரூபப் பரம்பொருளின் தன்மையையும், வெளிப்படையாகக் காட்டியபடி உங்கள் கரங்களில் தவழும், இச்சிறு ஞானச் சுவடிக்குரிய மூலக் கருத்துக்கள் கி. பி. எட்டாம் நூற்றுண்டில் அத்வைத ஆதவனுக உதித்த **ஜகத்குரு ஆதிசங்கரர்** அவர்களால், வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் இந்து தர்ம வேத உபநிஷத்துக்களின் அத்வைத சாராம்சங்களை ஒன்று திரட்டி மூன்று சுலோகங்களாக முறைப்படுத்தி அருளிச் செய்ததாகும்.

அத்வைத ஞான போதனைகளைப் பிரதிபலித்தவாறு **'பிராதஸ் ஸ்மரண ஸ்தோத்திரம்'** என வடமொழியில் உள்ள இந்த சுலோகங்களை; **நீலகிரி காந்தல் ஓம் அசலபீட** அத்வைத ஞான போதக, தவசீலர் **ஸ்ரீ ஓம் பிரகாசசுவாமி** அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

ஞானவிகித குரு ஓம்பிரகாச சுவாமிகள், அத்வைதத் தந்தையான ஆதிசங்கர குருபகவான் அடிச் சுவடு பற்றி; அத்வைத ஞான ரகசியங்களை, யாவரும் எளிதில் உணரும் வண்ணம் தமிழ் மொழியில் நூல்வடிவில் வெளிப்படுத்திய வேதாந்த ஞான பண்டிதராவார். வடமொழியிலும், அயல் மொழி ஆங்கிலத்திலும் இந்து வேதாந்த தர்ம அத்வைத ஞான போதனைகளை எளிதில் உணரும்படி எடுத்து விளக்கிக் கூறும் ஆற்றலமையப் பெற்றவர்.

அவரால் மூலக் கருத்திலிருந்து எள்ளளவும் மாற்றம் செய்யாமல் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கும் இச்சுலோகங்கள் உணர்த்தும் மெய்ப்பொருளை; பகுத்தறிவும் ஆன்மதாகமும் கொண்ட தமிழ் மக்களும் சுலபமாகப் புரிந்து கொண்டு ஆத்ம லாபம் பெற்றுப் பயனடைய;

அலங்கியம் சாந்தி நிலைய தவசீலர், ஞானயோகி இரத்தின சற்குரு அவர்கள், தமிழாக்க சுலோகங்களுக்கு தனது தவஞான அனுபவங்களின் அனுபூதி வாய்ந்த விளக்க மான தெளிவுரை அமைத்துள்ளார்.

ஆத்ம ஞானப் பயிற்சியாளர்கள் அனைவரும், ஆன்ம தத்துவத்தை எளிதில் அறியும்படி அமைந்த இச் சிறு நூல் 1967–ஆம் ஆண்டில் முதற் பதிப்பாக அலங்கியம் அன்பர் திரு. மு. தங்கச்சாமி அவர்களால் அச்சாகி வெளி வர லாயிற்று.

அத்வைத ஞான சூரியனாக ஒளி வீசிய ஜகத்குரு ஆதி சங்கரர் அவர்களின் அத்வைத ஞானக் குறிக்கோளுக்கு விரோதமான போலிக்கருத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அக்கருத்துக்கள் ஆதிசங்கரர் கூறியதாகவும், மற்றும்;

புராண-இதிகாச கற்பனைக் கதாநாயகர்களை எல்லாம் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்து, கடவுள்களாகக் கருதி வழிபாடு செய்ததாகவும் கூறி, அறிவுக்கொவ்வாத கருத்துக் களை மக்களிடையில் பரப்பி அத்வைத ஞானியான ஆதிசங்கர குரு பகவானை அறுசமயவாதியாக மாற்றிவிட முயற்சிக்கும் இக்காலத்தில்,

அறிவு பெற்ற மக்கள் ஆதிசங்கரரின் அத்வைத உண்மையை உணர்ந்து பயன் பெறவேண்டு மென்கிற குறிக் கோளின் நிமித்தம் முதற் பதிப்பை சீர்திருத்தி அத்வைத மணம் கமலும் இந்நூலை எங்களது ஞான மன்றச் சார்பாக இரண்டாம் பதிப்பாக வெளியிடுகின்றோம்.

இந்நூலில் சேர்த்துள்ள 'ஆதிசங்கரர் அத்வைதியா? அறுசமய வாதியா? என்ற ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட் டுள்ள உண்மைக் கருத்துக்கள் அறிஞர்களால் ஏற்றுக்கொள் ளக்கூடியதாகவே அமையப் பெற்றுள்ளன.

ஆத்ம மணம் கமழும் இவ்வறிவு நூல் நீலகிரி காந்தல் ஓம் பிரகாச சுவாமிகளின் சீடரும், எங்கள் ஞான பிதாவும் அத்வைத ஞான மன்ற நிறுவனருமான ஞானயோகி இரத்தின சற்குரு அவர்களின் 83-வது பிறந்தினமலராகவும் அவருக்கு பின் எங்களது ஞான வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்து அத்வைத ஞான மார்க்கத்தின்படி யோக-ஞான முறையில் உபதேசம் புரியும் அத்வைத ஞான மன்ற குருநாதர் தவத்திரு N. வெங்கட்ராமன் அவர்களின் 61-ஆவது பிறந்த தின அன்பளிப்பாகவும் கருதி உவகையுடன் பதிப்பித்துள்ளோம்

இச்சிறு ஞானச் சுவடியை அழகு பெற அச்சிட்டு நூல் வடிவாகத்தந்துதவிய மதுரை கண்மணி பிரிண்டர்ஸ் அன்பர்களுக்கும், சிரமம்பாராமல் பொருளுதவி புரிந்த அத்வைத ஞான மன்ற தவ சீலர்களுக்கும் ஞான மன்ற சார்பில் நன்றி செலுத்துகின்றனன்.


இறுதியாக இந்நூலில் கூறப்பட்டுள்ள அத்வைத ஞான அனுபவங்களைப் படிப்பதோடு மட்டும் நின்று விடாமல் ஒவ்வொருவரும் குருநாதரிடம் உபதேசம் பெற்று யோக நிஷ்டையில் தன்னையறிந்து ஞானத்தால்தான் அதுவாகி முத்தி பெற முயல்வீராக.

குரு வாழ்க ! குருவே துணை !!

உனையன்றி வேறு ஒன்றும் நினைத்தறியேன்—குருநாதா
உன்புகழ் முழுவதும் சொல்லறியேன்!

எனை,
தங்கள் அன்புக்கினிய,
ப. ரெங்கசாமி
பதிப்பாளர்

மதுரை
14-8-1987



தோற்றம் : 14-8-1905 ● பூரணம் : 30-5-1986

''பார்ப்பவன், கேட்பவன், முகர்பவன், சுவைப்பவன் நினைப்பவன், அறிபவன், இவனே; இவனே கர்த்தா. விஞ்ஞானத்மா, ஆதிபுருஷன், இவன் அழியாப் பிரம்மத்தில் நிலைத்தவன். இவனே பரப்பிரம்ம சொரூபம்''

— *பிரச்னோபநிஷத்து*




இர. கங்காதேவி

தோற்றம் : 13-2-1915 • பூரணம் : 13-1-1982

"குரவனாய் எனைப் பாவித்தே கொடும் பவக்கடல் கடந்தாள்
பரவிய பக்தியாலே பரநிலைதனை உணர்ந்தாள்
உரமுள பஞ்சகோச உரைதனை ஒழித்தப் பாலாம்
பிரம்மமாம் தனை அறிந்து பேரின்பப் பேரடைந்தாள்".


— ஞானயோகி இரத்தின சற்குரு
அத்வைத ஞானமன்றம், அலங்கியம்



குருநாதரின் வாரிசு. தற்போதுள்ள குருநாதர்

தவயோகி. N. வெங்கட்ராமன்

கொவிஞ்சிவாடி



அப்பியாச யோகி

தவத்திரு. கு. பெருமாள்

பொத்தனூர்

குரு பிரம்மா ! குரு விஷ்ணு ! ! குருதேவோ மகேஸ்வரா !

குரு சாக்ஷத் பரப் பிரம்மா ! தஸ்மைஸ்ரீகுருவே நாமோ !

காணிக்கை

சேலம் மாவட்டம் பொத்தனூரில் குருசாமிபிள்ளை நாகம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்து, உயர்நிலைக்கல்வி பயின்று பள்ளி வாழ்க்கையிலேயே தமிழ்மொழிப் பற்றும் சைவத்தொண்டில் ஆர்வமும் கொண்டு 29-ஆம் வயதில் **கனகம்மாள்** என்னும் மங்கை நல்லாளை மணமுடித்து **சிவ குமார், முத்து சேகரன், சண்முக சுந்தரம்** ஆகிய மூன்று ஆண்மக்களுக்குத் தந்தையாகி தமிழகத்திலுள்ள முக்கிய ஆலயங்களுக்கு க்ஷேத்திராடனம் சென்று பக்தி மார்க்கத்தில் வாழ்ந்து வந்தபோது, சிறியதந்தையார் திரு. **வைத்தியலிங்கனார்** மூலம் சற்குருநாதரின் தொடர்பு ஏற்பட்டு ஞான பிதாவின் ஞான நூல்களைப் படித்து தெளிந்து உணர்ந்து பிறவா மூத்திக்கு அத்வை மார்க்கமே சிறந்தது என அறிந்து தம் 50-ம் வயதில் 5 – 12 – 1976-ல் **ஞானயோகி இரத்தினசற்குருவை** சரணடைந்து அவரிடம் குண்டலினி **யோகப்பயிற்சி** பெற்று, தீவிர சாதனை பலத்தினால், ஞான தீட்சையும் பெற்று, குரு விசுவாசத்தினாலும் தனது தவவலிமையாலும், ஞான மன்ற வளர்ச்சிக்கு பல்வேறு வகையில் பணியாற்றிவருபவரும் 60-ஆம் ஆண்டு நிறைவு பெற்றவரும் மிகச் சிறந்த அப்பியசாயோகியும், குருவிசுவாசத்தில் மிகச் சிறந்தவருமான **தவத்திரு கு. பெருமாள்** அவர்களின் 60-ஆம் ஆண்டு நிறைவு நாளில் **''அதிகாலையில் ஆத்ம சிந்தனை''** எனும் இந்த ஞானச் சுவடியை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றனம். ஓம்

எனை,
தவத்திரு போஜன்
ஜெகதளா

நீலகிரி
14-8-87

பொருளடக்கம்

அதிகாலையில் ஆத்ம சிந்தனை

[பிராத ஸ்மரண ஸ்தோத்திரம்]

முதல் ஸ்லோகம்

பிராத : ஸ்மராமி ஹ்ருதி ஸமத்புரத் ஆத்ம தத்வம்
சத் சித் சுகம் பரமஹம்ஸ கதிம், துரியம்
யத் ஸ்வப்பன ஜாகர சுஷுப்தம் அவைதி நித்யம்
தத் பிரம்ம நிஷ்களம் அகம் நச பூதசங்க :

*

தமிழாக்கம் :

'எது எக்காலத்திலும், கனவு, விழிப்பு, தூக்கம் ஆகிய (மூன்று நிலைகளையும்) அனுபவித்திருப்பதாக (நான்காவதான) துரிய நிலையில் (சாட்சி மாத்திரமாக விளங்குகிறதோ) இருத்தல்—அறிதல்— மகிழ்தல் (சச்சிதானந்த வடிவமாயும்) பரமஹம்சர்களால் அடையத்தக்கதாக; உள்ளத்தில் செம்மையாக விளங்குகின்ற ஆன்மாவின் உண்மை யியல்பை அதிகாலையிலே தியானிக்கிறேன். நான் அந்த அவயங்களில்லாத பரம்பொருளே தவிர, பஞ்ச பூதங்களின் (திட பதார்த்தங்களின்) ஒன்று சேர்ப்பல்ல.'

**

தெளிவுரை :

இது முதல் சுலோகம்.

அதிகாலையில் ஆன்மாவின் உண்மை இயல்பை மனதால் தியானித்து வழிபடல்.

பிராத : ஸ்மராமி :- அதிகாலையில் தியானிக்கிறேன். எதை?

ஹ்ருதி ஸம்ஸ்புரத் ஆத்ம தத்வம் :- உள்ளத்திலே செம்மையாக விளங்குகின்ற ஆன்மாவின் உண்மை இயல்பை,

'உள்ளத்தில் செம்மையாக விளங்கும் ஆன்மாவைத் தியானிக்கிறேன்' என்றால் தியானிக்கப்படுபவன் ஆன்மா. எனவே, தியானிப்பவன் யார்? **ஆன்மாதானே?** ஆதலால் தியானிப்பவன் வேறு, தியானிக்கப்படுபவன் வேறு அல்லன். தியானிப்பவனே தியானிக்கப்படுபவனும் ஆகிறான்.

இருப்பது ஒரு பொருள் தான். (ஏகம் அத்வைதீதம் பிரம்மம்) அது பரமான்மா வாசிய பரம்பொருள். **அது, அதுவேயாகி, அதுவே 'நான்' ஆன ஆன்மாவாகி.** மேலும் அதுவே பாராதி அண்டங்களாகிய நாம—ரூப கற்பனைத் தோற்றங்களாகவும் பரிணமித்துள்ளது.

" இப்படிப்போல நாம ரூபங்கள் இரண்டுமின்றி
ஒப்பமாய் இரண்டற்று ஒன்றாய் உணர்வொளி நிறைவாய்
நிற்கும்
அப்பிரமத்தில் தோன்றும் ஐம்பூத விகாரமெல்லாம்
செப்பு கற்பனையினாலே செனித்தவென்று அறிந்து
கொள்ளே".

— [கைவல்ய நவநீதம்]

எனவே, ஆன்மா ஆகிய **நான்**, ஆன்மாவான **என்னையே தியானித்துக் கொள்ளுகிறேன்.**

உள்ளத்தில் செம்மையாக விளங்கிகிறவன் என்றால் 'மனதிலே தோன்றிக் கொள்பவன்' என்பதாகும். மனதுக்கு எல்லாப் பொருள்களும் தென்படுகின்றன. அதாவது மனம் தெரிந்து கொள்ளுகிறது. எல்லாவற்றையும் விளக்கி வைக்கும் 'மனம் ஆன்மாவை விளக்கி வைக்கமுடியாது.' கண்கள் எல்லாப் பொருள்களையும் பார்த்தாலும் தன்னைப் பார்க்க முடிகிறதில்லை. அதுபோல,

'ஆன்மா மனதில் தோன்றிக் கொள்ளுகிறது' என்றால் 'ஆன்மாவை மனம்' அறிகிறதில்லை அது தான் உலக விடய போகங்களில் ஓடிக் கொண்டிருக்கிறதே? ஆனால் 'மனதை ஆன்மா அறிகிறது.' மேலும், ஆன்மப் பிரகாசத்தினால் மனம் விளங்குகிறது எனவே ஆன்மாவானது, மனம் முதலான கருவி கரணாதிகளால் அறிய முடியாது. உள்ளமாகிய மலர் மிசை செம்மையாக விளங்குகிற ஆன்மாவின் உண்மை இயல்பை அதிகாலையிலே தியானிக்கிறேன்.

சத் சித் சுகம் : இருத்தல் – அறிதல்—மகிழ்தல். (வடிவமான ஆன்மாவின் உண்மை இயல்பை அதிகாலையிலே தியானிக்கிறேன்)

எக் காலங்களிலும் இருப்பதாய்—நித்தியமாய்—மெய்ப் பொருளாய் இருப்பதே **சத்.** எல்லாப் பொருள்களையும் அறியும் பேரறிவாய், எல்லாவற்றையும் ஒளிரச் செய்யும் பேரொளியாய் இலங்குவதே **சித்.** எந்நிலையிலுள்ள சுக சொருபமே **பேரின்பம்.** எனவே, பேரறிவாய்ப் பேரொளியாய்ப் பேரின்ப வடிவான **மெய்ப்பொருளாம்** ஆன்மாவின் உண்மை இயல்பை, ஆன்மா ஆகிய நான் அதிகாலையிலே தியானிக்கிறேன்.

> "இந்த எல்லா ஜகத்தும் இந்த ஆத்மா உள்ளது. அது சத்திய வஸ்து. அது தான் **ஆன்மா** என்று சொல்லப் பட்டது. அதுதான் நீயாய் இருக்கிறாய்"
>
> —(சாந்தோக்ய உபநிஷத் 8-7)

"யாவும்பிரக்ஞானத்தில் (சித்தில்)ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பிரக்ஞானமே பிரம்மம்"

— (ஐதரே யோபநிஷத் 5: 3)

பரம ஹம்ஸ கதிம் ; பரம ஹம்சர் என்பது சீவன் முத்தர்களில் ஒருவர்.

"இருவகை தீவிர தரத்தும் அம்சனென்றும்
பரமாம்ச னென்றும் சொல்வர்
பரமாம்சனுக்கு முத்தி இவ்வுலகில்
ஞானத்தால் பலிக்கும் என்பார்."

(– கைவல்ய நவநீதம்)

ஹம்ஸம் (அம்சம்) என்பது அன்னப் பறவை. அது பாலில் கலந்துள்ள நீரை நீக்கிவிட்டுப் பாலை மட்டுமே பருகுவதைப் போன்று, பரமஹம்சராகிய சீவன் முக்தரும்: ஆன்மாவிலே ஆரோபமாகத் தோன்றும், தேகாதி பிரபஞ்சங்களான நாம–ரூப தோற்ற திருசிய அனாத்ம வஸ்த்துக்களை விலக்கிவிட்டு, மெய்ப்பொருளான ஆன்ம வடிவிலே லயமாகி தானான தன்மயமானவராகும்.

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு" — [திருக்குறள்]

யத் ஸ்வப்பன ஜாகர சுஷீப்தம் அவைதி நித்யம் துரியம் :

எது எக்காலத்திலும், கனவு — விழிப்பு — தூக்கம் அதாவது சாக்கிரம், சொப்பனம், சுழுப்தி (ஆகிய மூன்று அவத்தைகளையும்) அனுபவித்திருப்பதாய் (நான்காவதான) துரியநிலை (அவத்தை) யில் (சாட்சி மாத்திரமாக விளங்குகிறதோ, அத்தகைய ஆன்மாவின் உண்மை இயல்பை அதிகாலையிலே தியானிக்கிறேன்)

கனவு விழிப்பு—தூக்கம் ஆகிய இம் மூன்று நிலைகளுக்கும் அப்பால் ஆன்மா, நான்காவதான துரியநிலையில் சாட்சி மாத்ரமாக இலங்குகிறது. எல்லையற்ற அகண்டாகார பரம்

பொருளாம் சிவம், அண்டசராசரம் அடங்கலும், அங்கிங் கெனுதபடி பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளது பரமாணு போன்ற சிறு பொருள்கள் முதல் அண்ட கோளம் போன்ற பெரும் பொருள்கள் வரை எல்லாப் பொருள்களி லும் அது நிறைந்திருக்கிறது. எங்கும் வியாபித்து நிறைந் துள்ள அப் பரம்பொருளான சிவம் நமது தேகத்துள்ளும் வாயபித்து நிறைந்துள்ளது நமது உடலில் நிறைந்து நின்ற 'பரம் பொருளே ஆன்மா ஆகிய நான்' ஆகும். அயமாத்ம பிரம்மம் (அதர்வண வேதம்).

நமது உடலில் வியாபத்திலகும் ஆன்மாவின் சித் சாயா பிரதிபிம்பமே சீவன் அல்லது சிதாபாசன். சூரிய ஒளி எங்கும் வியாபித்துவிளங்கினுலும், நீர் —கண்ணுடி முதலிய வற்றில் அதன் பிரதிபிம்பம் தெரிகிறது போல உடலில் சில இடங்களில் ஆன்ம வடிவ பிரதிபிம்பம் தெரிகிறது. அந்த இடங்களே மூலாதாரம் — சுவாதிஷ்டானம் — மணி பூரகம் — — அனுகதம் — விசுத்தி ஆக்ஞை எனும் ஆரு தாரங்களாகும்.

உடல் மூன்று வித நிலை (அவஸ்தை)க்கு உட்பட்ட தாகும். விழிப்பு நிலை (ஜாக்ரவாஸ்தை) கனவு நிலை (சொப்பனுவஸதை) தூக்க நிலை (சுழுத்தியவஸ்தை) ஆகிய இம்மூன்று அவஸ்தைகளும் ஒன்றன் பின் ஒன்ருக உடலைப் பிடித்துக் கொள்ளுகின்றன. விழிப்பு, அதன்பின் தூக்கம், இவ்விரு நிலைகளுமின்றேல் கனவு. தினந் தினம் மாறி மாறி இந்நிலைகளைச் சீவன் அனுபவித்து வருகிறது. ஆன்மா இந்த மூன்று அவத்தைகளுக்கும் சாட்சி மாத்திரமாக இலங்கு கிறது.

விழிப்புநிலை : சீவன், விழிப்பு நிலையில், ஆக்ஞை எனும் புருவ மத்திய நெற்றிக்கண் இடத்தில் நிலைத்து, தூல தேக கருவி கரணுதிகளான தத்துவங்களோடு கூடித் தூல உலகில் விவகிரிகிறது. தத்துவக் கூட்டங்களின் சலனத் தால் சிவனே தெரிய வருவதில்லை

கனவுநிலை ; சீவன், கனவுநிலையில் **விசுத்தி** யாகிய கண்ட ஸ்தானத்தில் நிலைத்து நின்று **சூக்கும தேக** தத்துவங் களோடு கூடி சூக்கும உலகில் விவரிக்கிறது. இந்நிலையிலும் தத்துவ சலனத்தால்—எண்ண அலைகளால்—சீவனை தெளி வாகத் தெரிகிறதில்லை. இது பற்றித் தவச் செல்வர் தாயு மானவ சுவாமிகளின் அனுபவ உரை காண்க.

'சாக்கிரமாம் நுதலினில் இந் திரியம் பத்தும்
சத்தாதி, வசனாதி, வாயு பத்தும்
நீக்கமில் அந் தக்கரணம், புருடனோடு
நின்றமுப் பானைந்தும்: நிலவும்; கண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயுப் பத்தும்
அடுத்தனசத் தாதிவச னாதி யாக
நோக்குகர ணம்புருட னுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே.''
''சுழுத்தி இத யந்தனிற்பி ராணன், சித்தம்
சொல்லறிய புருடனுடன் மூன்ற தாகும்;
வழுத்தியாநா பியில்துரியம்; பிராண னோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்
அலுத்திடுமூ லந்தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருடன் ஒன்றி அமரும் ஞானம்
பழுத்திடும்பக் குவரறிவர் அவத்தை ஐந்திற்
பங்குபெறக் கருவி நிற்கும் பரிசுதானே.''

தூக்க நிலை : சீவன், தூக்க சுழுத்திய வஸ்தையில் **அனாகதம்** எனும் இருதய ஸ்தானத்தில் நிலைத்து **காரண தேகம் பிராணனோடு** கூடி காரண உலகில் அவித்தையினால் மூடப்பட்டு **'சீவனேதான்'** எனும் மயக்கத்தில் ஆழ்ந்து உறங்குகிறது.

இந்த தூக்க—நித்திரை—நிலையில் ஆன்ம வடிவ பிரதி பிம்பம் உள்ளத்தில் தெரிந்தாலும், சூரியனால் உண்டான மேகம் சூரியனையே மறைப்பதுபோல, சீவபோத அறியாமை யால் ஆன்மா மறைக்கப்பட்டுள்ளது. இதுவே தற்போத மெனப்படும்.

அவத்தைகளை அனுபவிப்பது சீவன் தான். அசைவற்ற (நிஸ்ஸல) ஆன்மா, மாயா அவித்யா மோகத்தால் தன் பிரதிபிம்பமான சீவனை நான் என அபிமானிக்க, சீவன் அவித்தையான மனதை அபிமானிக்க, மனம் இந்திரியங்களை அபிமானிக்க, இந்திரியங்கள் தேகத்தை அபிமானிக்க, மாயா விலாச சகத்தில் சத்திய புத்தியும்—தேகத்தில் அகம் புத்தியும் ஏற்பட்டு, தேகமே ஆன்மா — போகமே முத்தி எனப் பாவித்து பிறப்பு–இறப்பு எனும் சம்சார பந்தத்தில் சிக்கித் துக்கத்தால் மயங்கலாயின.

நித்திரையிலே : தேகம் பிணம்போல் அசைவற்றிருக்க கருவி கரணாதிகள் செயலற்று அடங்க, மனம் சலனமற்று ஒடுங்க, அவித்தையோடு கூடிய சூன்ய இருளில் '**சீவனே நான்**' எனும் அபிமானத்துடன் ஆன்மா மயங்கிய நிலையில் இலங்குகிறது.

நிஷ்டையிலே : தேகம் அசைவற்றிருக்க, கருவி கரணாதிகள் செயலற்று ஒழிய, மனம் சலனமற்று அழியத் **தன்னைத்தான் அறிந்த** சுட்டறிவுடன் **சிவோகம்** உணர்வுடன் ஆன்மா தெளிவாக இலங்குகிறது. நித்திரைக்கும் நிஷ்டைக்கும் அதிக பேதமில்லை.

முன்னது தன்னை அறியா நிலை; பின்னது தன்னை அறிந்த நிலை; இவ்வளவுதான். **நிஷ்டை** என்பது உணர்வோடு கூடிய உறக்கம்; அறிவோடு கூடிய துயில்; **அறிதுயில்.** தூங்காமல் தூங்கும் நிலையாகும் நிஷ்டை அது விழிப்பு மல்ல – கனவுமல்ல — தூக்கம் அல்ல. பின் அது எந்நிலை? அந்நிலையே — **நிஷ்டை**நிலையே **துரியம்** ஆகும். சிவயோக நித்திரை எனவும் கூறலாம்.

"பராபர வெளியாய் நின்ற பாசசாலம் கடந்த
நிராமய சிவம் தானாகி நிற்பது, ஞான நிஷ்டை."

— [சிவஞான வள்ளலார்]

விழிப்பு – கனவு — தூக்கம் — அம்மூன்று அவஸ்தைகளில், விழிப்பு தூல தேகத்திலும், கனவு சூக்கும தேகத்திலும், தூக்கம் காரண தேகத்திலும் நிகழுகிறது.

"தூல உடல் சூக்கும தேகத்தில் இல்லை
தூல உடல் சூக்கும உடல் அவ்விரண்டும்
ஆலயமாம் காரண தேகத்தில் இல்லை.
அவை மூன்றும் துரியத்தில் இலவே இல்லை."

— [ரிபுகீதை]

இவற்றை அனுபவிப்பது சீவனே தவிர ஆன்மா அல்ல. ஆனால் இம் மூன்று நிலைகளுக்கும் ஆன்மா சாட்சி மாத்திரமாக உள்ளது. துரிய நிலையான ஞானநிஷ்டையில், ஆன்மா தானான தன்மயமாய்ப் பிரகாசிக்கிறது.

"தூலசூட்சுமஅஞ்ஞானம்தோற்றம்மூன்றவத்தை தாமும்
காலமோர் மூன்றும் சென்மக்கடலெழும் கல்லோலங்கள்
போலவே வந்துவந்துபோன வெத்தனை யென்பேன் நான்
ஆலமர் கடவுள் ஆணை அவைக்கெலாம் சாட்சி நீயே."

— [கைவல்ய நவநீதம்]

உடல் அழிந்தாலும் காரண தேகமான சீவன் அழிவதில்லை அதனால் மரணம் என்பது சீவனுக்குத் தூங்குவது போன்றது. அந்த சீவன் வேறோர் உடலைத் தேடிப் பிறப்பது. தூங்கி விழிப்பது போன்றது.

"உறங்குவது போலும் சாக்காடு ! உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

— (திருக்குறள்)

ஆதலால், சீவன் நானல்ல! சாட்சி மாத்திரமான, அதிஷ்டான பிரம்மமாம் 'ஆன்மாவே நான்' எனும் மெய் யுணர்வு ஏற்படும்போது பிறப்பு—இறப்பு ஒழிந்து சீவன் முத்தி கிட்டுகிறது. சாட்சி மாத்ரமான துரிய நிலையிலுள்ள ஆன்மா ஆகிய என்னை நானே — அதிகாலையில் தியானித்துக்கொள்ளுகிறேன்.

"தத் பிரம்ம நிஷ்களம் அஹம் நச பூத சங்க:"

"நான் அந்த அவயவங்களில்லாத **பரம் பொருளே (தவிர) திட பதார்த்தங்களின் (பஞ்சபூதங்களின்) ஒன்றுசேர்ப் பல்ல."**

நாம— ரூபதோற்றமான பாராதி அண்டங்கள், தேகாதி பிரபஞ்சங்கள் ஆகிய மாயா கற்பிதமான ஜகத் தோற்று வதற்கு முன்பு, இந்த ஆன்மா பரம்பொருளாகவே இருந் தது. அது, நான் பரம்பொருள் எனத் தன்னை அறிந்த போது அது எல்லா மாயிற்று. எனவே, எல்லையற்ற அகண்ட பெருவெளியான **பிரம்ம சொரூபமே ஆன்மா.**

"இந்த ஜகத்திலே எவ்வெவ் வஸ்து இருக்கிறதோ
அவை யாவும் பரமாத்மாவால் மூடப்பட்டிருக்கின்றன. (அதாவது ஒவ்வொன்றிலும் அவரிருக்கிறார். அவரன்றி ஒன்றும் கிடையாது). அதை (அந்த ஜகத் உபாதியை)த் தள்ளிவிட்டு அவராகவே துதி."

— (ஈசாவாஸ் யோபநிஷத்)

"ஏக பரிபூரணமாம் அறிவே, ஆன்மா
இவ்வறிவே விவகார திசையின் மைந்தா
ஆகமுத லந்தவித உபாதி கட்கும்
அதிட்டான வடிவாக அமர்ந்து நிற்கும்
தேகமுதல் அனைத்தினுக்கும் சாட்சி யாகும்
திரிசியமாம் பொருட்கெல்லாம் அதீதம் ஆகும்
பாகமற விசாரிக்கில் இவ் ஆன்மாவே
பகுப்பற்ற பரப்பிரம்ம சொரூபமாமே."

— (ரிபுகீதை)

எக் காலத்திலும் இருப்பதான, ஒரே தன்மையுள்ள அத்வைத; குறிப்பிட்ட வரம்புக்குட்படாததான **பிரம்மம்** எல்லாவற்றையும் விடப் பெரிது. பிரம்மம்என்றால் 'பெரியது

எனப் பொருள்படும் இஸ்லாம் மார்க்கமும் அல்லாஹு அக்பர் (ஆண்டவனே பெரியவன்) என முழங்குகிறது. மேலும் 'லாஇலாஹ இல்லல்லாஹு' எனும் 'அல்கலிமதுல் தையிபா'வுக்கு (அல்லாஹவைத் தவிர வேறில்லை) என்று பொருள். 'சர்வம் பிரம்ம மயம் ஜகத்' என அருமறையும் அறை கூவுகிறது. எனவே, இருப்பது ஒரே ஒரு பொருள்; அதுவே (ஆன்மா வடிவமான பிரம்மம். ''அஹம் பிரம்மாஸ்மி.'' (யஜுர்வேதம்)

''பிண்டமாம்உடல் நான் அல்லன் பிராணவாயு நானல்லன்!
கண்டஜம்பொறியுமல்லன்! கரணமோர் நான்குமல்லன்!
பண்டைய அறிவே நான் என்றுன் அருள்கொண்டு பார்க்கில்
எண்டிசை கீழ்மேல் எங்கும் ஏகமாய் இருக்கின்றேனே''

எனும் சிவஞான வள்ளலார் அருள்மொழியும்,

''கட நீரில் மேக நீரில் கண்டவான் இரண்டும் பொய்யே!
குடவானும் பெரியவானும் கூடி ஒன்றும் எப்போதும்
இடமான பிரம்மம் சாட்சி இரண்டும் எப்போதும் ஏகம்
திடமாகச் சுவானு பூதி சிவோகம் என்று இருந்திடாயே'

என வைகல்ய நவநீத ஞான நூலும், சாட்சி மாத்ரமான 'ஆன்மாவே பரம்பொருள்' எனச் சந்தேகமின்றி விளக்குவது காண்க.

''பூமியிலே வழங்கிவரும் மதத்துக்கெல்லாம்
பொருளினை யாம் இங்கெடுத்துப் புகலக் கேண்மின்!
சாமி நீ! சாமிநீ! கடவுள் நீயே!
தத்துவமசு, தத்துவமசி அதுவே நீயாம்,
பூமியிலேநீ கடவுள் இல்லை என்று
புகழ்வதுநின் மனதுள்ளே புகுந்தமாயை
சாமி நீ! அம்மாயை தன்னைத் தள்ளிச்
சதா காலம் சிவோகம் எனச் சாதிப்பாயே.''

எனும் மகாகவி பாரதியாரின் ஞான உரையையும் ஈண்டு ஒவ்வித்திடுக.

ஆதலால், ஆன்மநேய மெய்யன்பர்களே!

விழித்து எழுந்ததும், தேகம் முதலான கருவி கரணாதிகளை **நான்** என, எண்ணி அதன் சம்பந்தமான யோசனைகளைத் தன்மீது ஏற்றுக்கொள்ளும் கெட்ட வழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லா மொருங்கு.''

— (திருக்குறள்)

சச்சிதானந்த வடிவமான **''பரம்பொருளே நான்''** எனும் வேதவாக்கை உள்ளத்தில் பதியச் செய்ய வேண்டும். பஞ்சபூதக் கூட்டுறவான 'அனாத்ம வஸ்துவேதான்' எனும் கற்பனைக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொள்வதே **முத்திநெறி** ஆகும். எனவே, **நான்** அரூப **சைதன்யப் பரம்பொருளே** தவிர, பஞ்சபூத விகாரமல்ல **சிவோகம்.**

இரண்டாம் ஸ்லோகம்

ப்ராதர் பஜாமி மனஸோ வசஸோ மகம்யம்
வாசோ விபாந்தி நிகிலாய தனுக்கிர ஹேண!
யம் நேதி நேதி வசனைர் நிகமா அவோசுஸ்
தம் தேவ தேவ மஜமச்யுத மாஹீரக் ரயம்!!

*

தமிழாக்கம்:

'யாருடைய கருணையினுலே, எல்லா வார்த்தைகளும் விளங்குகின்றனவோ, யாரை வேதங்கள் 'இதல்ல! இதல்ல' எனும் வசனத்தால் (சொல்லாமல்) சொல்லியிருக்கின்றனவோ, மனதுக்கும் — வாக்குக்கும் எட்டமுடியாத (ஆன்மாவின் உண்மை இயல்பை) அதிகாலையிலே வாக்கால் துதிக்கிறேன். அதை ஒளிகளுக்கெல்லாம் ஒளி என்றும், பிறப்பில்லாத தென்றும், அழிவில்லாத தென்றும், முதன்மையான தென்றும் சொல்லுகிறுர்கள்'.

***

தெளிவுரை :

இது இரண்டாம் சுலோகம்.

அதிகாலையில் ஆன்மாவின் உண்மை யியல்பை (தத்து வத்தை) வாக்கால் துதித்து வழிபடல்.

பிராதர் பஜாமி : அதிகாலையிலே துதிக்கிறேன். எதை?

மனஸோ வசஸா மகம்யம் ; மனதிற்கும் — வாக்கிற் கும் எட்ட முடியாத (ஆன்மாவின் உண்மை யியல்பை வாக்கால் துதிக்கிறேன்)

ஆன்ம சொரூபம் மனம் வார்த்தைகளுக்கு எட்டமுடி யாதது.

"ஆனந்தமய மாகிமனம் வாக்கெட்டா சித்துருவாய்."
— [தாயுமானவர்]

"ஆகமப் பிரமாணத்தால் அறிஎன்றும் வாக்குக்கெட்டாது
ஏகமாம்பிரம்மம் என்றும் இதயத்தால் உணர்வாய்என்றும்
சோகமாம் மனதுக்கு எட்டாச் சுயஞ்சோதி..."
— [கைவல்ய நவநீதம்]

அனுபவம் : பஞ்சபூதங்களிலே **'பிருதிவி'** எனும் மண், கண்ணுக்குப் புலனாகும்; கையுக்கும் பிடிபடும். திட பதார்த்தம் இது பிரத்யட்சப் பிரமாணம். **அப்பு** எனும் நீர், கண்ணுக்குப் புலப்படும். கையுக்குப் பிடிபடாத திராவகப் பதார்த்தம்; இதுவும் பிரத்யட்சப் பிரமாணம். **தேயு** எனும் நெருப்பு, கண்ணுக்குப் புலப்படும்; கையிக்குப் பிடிபடாத சூடான ஆவி வடிவம். இதுவும் பிரத்யட்சப் பிரமாணம். **வாயு** எனும் காற்று, கையுக்கும் பிடிபடாது; கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் ஸ்பரிச உணர்ச்சியால் அறியப்படுகிறது. இது அனுமானப் பிரமாணம். (புகை கண்டு அங்கு நெருப்புண்டென்பது போல) **ஆகாயம்** எனும் வெளி; கண்ணுக்குப் புலப்படாது எனினும்; அறி வினால் உணர்கிறோம். இது சுருதிப் பிரமாணம்.

இது வரையிலும் பஞ்ச பூதப் பொருள்கள், மனம் — வாக்குகளுக்கு எட்டும்.

இதற்கு மேலுள்ள நுட்பமான **சூன்யவெளி'** யாகிய, இருளையறிய பகுத்தறிவான விஞ்ஞான அறிவு வேண்டும். மனதால்கூட அறிவது கடினம். இதற்கப்பால் இலங்கும் நுண்மையான **பரவெளி**யாம் 'மாயை'யை உணர, தன்னை அறியும் அறிவான **'சுட்டறிவு'** அசனுல்தான் முடியும். எல்லையற்ற அகண்ட வெளியான **பரம்பொருள்**. ஆன்மா ஆகிய **சுகாதீத அறிவாகி** தானுன தன்மயமாயிலங்குகிறது.

எல்லையற்ற அகண்ட பெருவெளியில், பூமி — சூரியன் — சந்திரன் — கிரகங்கள் நட்சத்திர கணங்களாகிய மண்டலங்களெல்லாம் சிறு துரும்புபோலமிதந்து கொண்டிருக்கின்றன வென்ருல் அந்த எல்லையற்ற பெருவெளியின் தன்மையை வாக்கினுல் விளங்கிச் சொல்லவோ மனதால் பாவிக்கவோ, முடியுமா? முடியாதல்லவா? ஆதலால் 'ஆன்ம வடிவான பரம்பொருள் மனோவாக்குகளுக் செட்டாதது' என்று வேதங்கள் விளம்புகின்றன. எவ்விதத் தன்மையு மில்லாத பொருளை விளக்கிக் கூறவும் முடியாதே?

"வாசோ விபாந்தி நிகிலாய தனுக்கிற ஹேண":

'எதனுடைய கருணையினுலே எல்லா வார்த்தைகளும் விளங்குகின்றனவோ, (அப்படிப்பட்ட ஆன்மாவின் உண்மை யியல்பை அதிகாலையில் வாக்கினுல் துதித்து வழிபடுகிறேன்.)

வார்த்தைகள் எதனுல் விளங்குகிறது? ஆன்மாவினுல்' துதிப்பவனும் துதிக்கப்படுபவனும் ஒன்றே யாதலால் ஆன்மாவே தானுன தன் மயமாய் நின்று தன்னைத்தானே சுட்டறிவால் அறிந்து அனுபவத்தால் சொல்லாமல் சொல்லித் தன்னையே துதித்துக் கொள்ளுகிறது.

"சொல்லாமல் சொன்னவனை நினையாமல் நினைந்து
பவத்தொடக்கை வெல்வாம்." — [பரஞ்சோதிமாமுனிவர்]

ஆன்மா மனதால் தியானிக்கவோ, வார்த்தைகளால் விளக்கிக் கூறவோ முடியாத தன்மை உள்ளதாயினும் மனமும் — வார்த்தைகளும் ஆன்ம சைதன்யப் பிரகாசத்தினுல்தான் விளங்குகின்றன எனும் உண்மையை நாம் நன்கு உணர வேண்டும்.

இருளிலே ஒரு பொருளைப் பார்க்க வேண்டுமானுல், விளக்கின் உதவி வேண்டியிருக்கிறது; விழியின் உதவியும் வேண்டும். ஆனுல், சூரியனைப்பார்க்கக் கண்ஒன்றே போதும். அதுபோல, அஞ்ஞான இருளில் உலகை நோக்க மனம் வேண்டும். அறிவு சொரூப ஆன்மாவின் உதவியும் வேண்டும். ஆனுல், ஆன்ம சூரியனைப் பார்க்க ஞானக்கண் ஆகிய சுட்டறிவு (ஆன்மா) ஒன்றே போதும். கருவி கரணுதிகளால் ஆன்மாவை விளக்கி வைக்க முடியாது.

ஆதலால், ஆன்மாவின் தத்துவத்தை விளக்க வேதங்கள் ஒரு புது உத்தியைக் கைக் கொண்டிருக்கின்றன.

''எதனிடத்தில் நின்றும் வாக்குகள் மனதுடன் எட்டாமல் திரும்பி விடுகின்றனவோ, அந்தப் பிரம்மத்தை அறிந்த வித்வானுக்கு (ஆத்மஞானிக்கு) எதிலிருந்தும் பயமில்லை''
— (தைத்திரீ யோபநிஷத் 2-9)

''அறிபடும் பொருள் நீயல்லை அறிபடாப்பொருள் நீயல்லை
அறிபொருளாகும் உன்னை அனுபவித்து அறிவாய்நீயே.''
— [கைவல்ய நவநீதம்]

''உன்னுல் அறியப்படும் பொருள்கள் உன்னை அறியமாட்டாவால்
உன்னுல் அறியப்படும் பொருள்கள் உனக்கு விடயமாம். கண்டாய்
உன்னுல் அறியும் பொருள் அழியும் ஒரு காலமும் நீ அழிவதில்லை
உன்னுல் அறியும் பொருளை விடுத்து உன்னை விசாரித்து அறிவாயே''

என அறிவுறுத்துகிறது உபதேச உண்மையும், வைகல்யமும்

யம் நேதி நேதி வசனைர் நிகமா அவோசுஸ் :

'எதனை வேதங்கள் இதல்ல—இதல்ல எனும் வார்த்தைகளால் (சொல்லாமல்) சொல்லுகின்றனவோ—அப்படிப் பட்ட ஆன்மாவின் உண்மை இயல்பை அதிகாலையில் துதிக்கிறேன்.'

ஆன்மாவின் உண்மை யியல்பை வேதங்கள் கூட விளக்கிக் கூற முடியாமற் போகவே, அது ஒரு தனி வழியைக் **கைக்கொண்டது.**

ஆன்மா, கருவி கரணாதிகளான சில தத்துவங்களோடு கலந்திருப்பதால், புலன்களுக்கும்–மனதிற்கும் விஷயமாகும் (கிரகிக்கக்கூடிய) அந்த **அனாத்ம** தத்துவக் கும்பலை **இது அல்ல! இதல்ல** என்று விலக்கிக் கொண்டே வந்து, முடிவில் மிஞ்சியது எதுவோ? எது விலக்கமுடியவில்லையோ எது அனாத்மவான எல்லா வஸ்துக்களையும் விலக்கிக் கொண்டு வந்ததோ? **'அதுவே ஆன்மாவான நீ'** எனச் சொல்லாமல் சொல்லுகிறது **அருமறை** ஆத்ம தத்துவத்தின் இரகசியங்களை விளக்கும் **உபநிஷதங்கள்** எனும் வேத பாகங்களையே அருமறை எனக் கூறப்பட்டது. அந்த உபநிஷதங்கள் அறிவுறுத்திக் கூறும் வழிபற்றியே ஆன்ம இயல்பை அறிய வேண்டுமே தவிர, மற்ற வேறு வழிகளில் அறிய முடியாது. இந்த நிவர்த்தி (ஞான) மார்க்கமே பயனுள்ள சரியான நேர் வழி.

> "தன் பதியல்லாப் பேர்கள் தமையல்ல அல்ல வென்றாள்
> அன்பனைக் கேட்ட நேரம் அவள் வெட்கி மௌனமானாள்
> என்பதைப்போல நீக்கி இதன்று இதன்று எனச் சேடித்த
> பின் பரப்பிரம்மம் தன்னைப் பேசாமல் பேசும் வேதம்."
>
> — **(கைவல்ய நவநீதம்)**

தம் தேவ தேவம் அஜம் அச்யுதம் ஆஹீர் அக்ரயம் ;

'அதை தேவர்க்கும் தேவன் என்றும் (ஒளிகளுக்கெல்லாம் ஒளி என்றும்) பிறப்பு இல்லாத தென்றும் அழிவில்லாத தென்றும் முதன்மையான தென்றும் (மகரிஷிகள்) சொல்லுகிறார்கள்.'

ஆன்மா நம் சொந்த வடிவம். அது சித்-அறிவு வடிவ மானதால் அது தானான தன்மயமாக இலங்குகிறது. அநாத்மா ஆகிய தனு கரணாதிகளை ஆன்மாவான நான் அல்ல' என்று ஒதுக்கிய மெய்யுணர்வு உறுதியாகத் திடப் படும்போது ஆன்ம வடிவம் தன்னாலே தெளிவாக விளங்கும். ஆன்மா எல்லாப் பொருள்களையும் விளக்கி வைக்கும் ஒளிமய மானது. எது பொருள்களை விளக்கும் ஒளி உள்ளதோ அது தேவ என, ஒளியுள்ளதெனக் கூறப்படுகிறது.

சூரியன் உலகுக்கு ஒளி தந்து எல்லாப் பொருள்களையும் விளக்கி வைக்கிறான். ஆனால் சூரியனை ஒளிர்விப்பது எது? கண்கள். கண்களில்லாவிட்டால் கதிரவனைக் காண முடி யாது. "ஒரு கோடி சூரியர்கள் ஒக்க உதித்தாலும் குருடர்க்கு இருள் அகலாது." (சிவஞான வள்ளலார்) ஆதலால் கண்கள் சூரியனை விளக்கி வைக்கிறது. கண்களை ஒளிர்விப்பது எது? மனம். மனம் இல்லாத உறக்கத்தில் கண்களிலிருந்தும் பயன் இல்லையே? மனம் இல்லாவிடில் கண்கள் ஒளி பெற முடியாது. எனவே, மனமே கண்களை விளக்கி வைக்கிறது. மனதை விளக்கி வைப்பது எது? அதுவே ஆன்மா. ஆன்மா ஒளியால் மனம் விளங்குகிறது. மனதை ஒளிர்விப்பது ஆன்மா.

ஆன்மா சுயம்பிரகாச மாதலால், அதை மற்றபொருள் களால் பிரகாசிப்பிக்க முடியாது. ஆன்மா, தன்னைத் தானே ஒளிர்வித்துக் கொண்டும், மற்றப் பொருள்களை ஒளிர்விக்க வும் செய்கிறது ஒளிகளுக்கெல்லாம் ஆன்மா ஒளியாக இருப் பதால், தேவ தேவம் — ஒளிகளுக்கெல்லாம் ஒளி என்று சொல்லப்படுகிறது.

ஆன்மா அனாதியானது; ஆதலால் பிறப்பு இல்லாதது. முக்காலங்களிலும்—எக்காலங்களிலும்—உள்ள மூலப் பொருள் ஆதலால் அழிவில்லாதது. ஆதியானதால் முதன்மையானது.

பிறந்ததும் இறந்த தற்ற பிரம்மமாம் நானே, நானே''
— [வைகல்ய நவநீதம்

ஆகையால், ஆன்மநேய அன்பர்களே !

நாம் அதிகாலையில் ஆன்ம சொருபத்தை வழிபடுங்கால், அனாத்ம வஸ்துக்கள் பல கால சேர்க்கையால் குறுக்கிடுமாதலால் அதற்கு இடம் கொடாமல் உணர்விலெழும் ஆன்ம சொருபத்தையே உறுதியுடனும், விடா முயற்சியுடனும் அதை நம்முடைய தாக்கிக் கொண்டு, அதுவே தானாகி, சொல்லாமல் சொல்லும் 'பேசாத மந்திரம்' எனும் மோன நிலையாம் ஞான நிஷ்டை சாதனை புரிதல் வேண்டும்.

மூன்றும் ஸ்லோகம்

பிராதர் நமாமி தமஸ பரமார்க்க வர்ணம்
பூரணம் சனுதனபதம் புருஷோத்ம மாக்யம்!
யஸ்மின் னிதம் ஜக தசேஷ மசேஷ மூர்த்தௌ
ரஜ்வாம் புஜங்கம் இவ ப்ரதிபாதி தம் வை!!

※

தமிழாக்கம் !

'இருட்டிற்கு அப்பாலிருக்கும் சூரிய நிறமுள்ள (சூரிய னுக்கே ஒளியாகவுமுள்ள)தும், நிறைவுள்ளதும், பழமை யான இருப்பாகவுள்ளதும், மனிதர்களிம் சிறந்தவனும் (ஆகி) எந்த எல்லா உருவத்திலும் இந்தஎல்லா உலகும் (பிரபஞ்சங்களும்) கயிற்றில் பாம்புபோல (கற்பனை யாக)த் தோன்றுகிறதோ (அப்படிப்பட்ட) கீர்த்தி வாய்ந்த (ஆன்மாவின் உண்மை இயல்பை) அதிகாலை யிலே வணங்குகிறேன்.'

※※

தெளிவுரை :

இது மூன்றும் சுலோகம்.

அதிகாலையில் ஆன்மாவின் உண்மை யியல்பைக் காயத்திஞல் வணங்கி வழிபடல்.

பிராதர் நமாமி: அதிகாலையிலே வ ண ங் கு கி றே ன். எதை?

தமஸ பரமர்க்க வர்ணம் : இருட்டிற்கு அப்பாவிருக்கும்சூரிய நிறமுள்ள சூரியனுக்கே ஒளியைத் தரவல்ல ஆன்ம சொருபத்தின் உண்மை யியல்பை அதிகாலே (வைகறை)யிலே காயத்தால் வணங்குகிறேன்.

வணங்குகிறவன் யார்? வணங்கப்படுபவன் யார்? இருவரும் ஒருவரேதான் இதைத்தெளிவாக உணர்ந்த ஞானனுபவமுள்ளவனே ஆக்மஞானி; சீவன்முத்தன் தன் ஆன்மாவைத் தவிர வேருென்றில்லாத அத்வைத ஆரூட ஞான நிலேயில் **எங்கும் நானே எல்லாம் நானே !** என, ஏகம் ஆகியபோது, வணங்குகிறவனும் — வணங்கப்படுபவனும் ஒருவனேதான்.

> "என்னே! நான் என்னே வணங்குகிறேன்—ஒன்றும்
> எனக்கில்லே. இன்றேல் மனவாக்குக்கிலாக்காம்
> அனைத்தும் என்னதே."
>
> — [அஷ்டவக்ரகீதை II–14]

> "Am I, worshipping Thee My Lord? No,
> Thouart worshipping Thy self."
>
> — (Vivekananda)

(இறைவா, நாஞ உன்னே வணங்குகிறேன்? இல்லே; நீயே உன்னே வணங்கிக் கொள்கிருய்)

—(சுவாமி விவேகானந்தா)

"படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக,
மனுவைப் படைத்தான் தன்னை வணங்க."
— [மௌலானா ரூமி]

மற்றும் மெய்ஞ்ஞானச் செல்வர் தாயுமானவ சுவாமிகள் அருளுரையும் காண்க.

"பண்ணேன் உனக்கான பூசைஒரு வடிவிலே;
பாவித்தி றைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி; அப்
பனிமலர் எடுக்கமனமும்
நண்ணேன்! அலாமல் இரு கைதான் குவிக்க எனின்
நாணும்என் னுளம்நிற்றி நீ;
நான் கும்பி டும்போ தரைக்கும்பி டாதலால்
நான்பூசை செய்தல்முறையோ?

ஆன்மீக முமுட்சுக்களே! ஆன்மாவின் உண்மை இயல்பு 'சித்' சொரூபம்; அதாவது ஒளி வடிவம். அருட்பெருஞ் சோதி எங்கும் வியாபகமாய் நிறைந்த பரம்பொருள். சூரியனும் ஆன்ம ஒளியாக விளங்குகிறது. ஆதலால் சூரியனிலும் ஒளியாக விளங்குவது ஆன்ம சொரூபமே யாகும். (17-ஆம் பக்கம் பார்க்க)

இருள் என்பது அறியாமை. அறியாமை அறிவிலிருந்தே தோற்றுகிறது. இருளானது அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாக இருக்கிறது. விளக்கு இருக்குமிடத்திலேயே இருளும் இருக்கிறது. விளக்கு இருக்குமிடத்தில் ஒளி பரவி இருப்பதுபோல இருளும் வியாபித்து இருக்கிறது! திடீரென விளக்குஅவிந்தால் இருள் சூழ்ந்துகொள்ளுகிறதே.

'பஞ்சகோ சமும்விட்ட ப்பால்பார்க்கின்ற பொழுதுபாழே
விஞ்சியதது அல்லாமல் வேறொன்றும் தெரியக்காணேன்
அஞ்சன இருளை யோ நான் அகம்என அநுப விப்பேன்
வஞ்சம்இல் குருவேஎன்ற மகன்மதி தெளியச்சொல்வார்
— [கைவல்ய நவநீதம்]

எனவே இருளுக்கப்பால் ஆன்மா ஒளிமயமாக இலங்கி இருளையும் எதிரிட்டு அறிகிறது. அப்படிப்பட்ட ஆன்ம வடிவான எனது உண்மை இயல்பை அதிகாலையிலே வணங்கு கிறேன்.

பூரணம் : நிறைவுள்ளது. நீக்கமற எங்கெங்கும் நிறைந்து நின்றுஅண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறை வாகி, பரமாணு போன்ற சிறிய பொருள்கள் முதல் அண்ட கோளம் போன்ற பெரிய பொருள்கள் வரை எல்லா வஸ்துக் களிலும் நிறைந்துள்ளதே **பரிபூரணத்வம்** ஆன்மா, பரி பூரணத்வமுள்ளது (அப்படிப்பட்ட ஆன்மாவின் உண்மை இயல்பை வணங்குகிறேன்)

"சித்துநான் நிறைந்தோன் என்ற திடம் மறவாதிருந்தால்
எத்தனை எண்ணினாலும் ஏது செய்தாலு மென்ன?"
(கைவல்ய நவநீதம்)

சனாதனபதம் : பழமையான அனாதி காலம் முதல் எக்காலத்திலும் இருப்பாக-சத்-ஆக உடைய ஆன்மாவின் தத்துவத்தை அதிகாலையிலே வணங்குகிறேன்.

இந்த காலம் - நிகழ்காலம் - எதிர்காலம் ஆகிய முக் காலமுங் கடந்து, அன்றும் - இன்றும் - என்றும் சத் ஆக எவ்விடத்தும் இருப்பாக உள்ளது ஆன்ம சொரூபம்.

"சத்தொடு சித் ஆனந்தம் சமம் ஸ்திரம் சாட்சி ஏகம்
நித்தியம் வியாபி ஆன்மா நீ." —(கைவல்ய நவநீதம்)

புருஷோத்ம மாக்யம் ; மனிதர்களிற் சிறந்தவன் எனும் பெயரையுடைய(ஆன்மாவின் உண்மைவடிவை அதி காலையிலே வணங்குகிறேன்.)

தன்னை அறிந்து தானான தன்மயமாய் (சிவமயமாய்) விளங்குபவனான சீவன் முத்தனே மனிதர்களிற் சிறந்தவன். ஆன்ம சொருபத்திலானவனே புருடர்களில் சிறந்த புருஷோத்மன்.

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு." — (திருக்குறள்)

"நான் அழிவுள்ள தற்கும் அழிவில்லாததற்கும் அப்பாலுள்ள வனுதலால் உலகத்தோராலும், வேதங்களாலும் புருஷோத்மன் என்று கூறப்படுகிறேன்"
— (பகவத்கீதை)

யஸ்மின் னிதம் ஜெகதசேஷ மசேஷமூர்த்தௌ
ரஜ்வாம் புஜங்கம் இவ பிரதி பாதி தம் வை !

'எந்த எல்லா உருவத்திலும் இந்த எல்லா உலகும் கயிற்றில் பாம்புபோல (கற்பனையாக) தோன்றுகிறதோ (அப்படிப்பட்ட) கீர்த்தி வாய்ந்த (ஆன்ம தத்துவத்தை) அதிகாலையில் வணங்குகிறேன்'

எல்லையற்ற அகண்ட பரிபூரண அரூப சைதன்யமான பரம்பொருளானது பரமாணு முதலாக எல்லாப் பொருள்களிலும் ஆன்ம சொரூபமாக வியாபித்திருக்கிறது. அந்த ஆத்ம வடிவிலே பாராதி அண்டங்கள்-தேகாதி பிரபஞ்சங்களெல்லாம், கயிற்றில் பாம்பு போல கற்பனையாகத் தோற்றுகிறது.

ஆகவே, ஆன்மாவே தனக்கன்னியமாகக் கருதப்படும் அனுத்மாவான கற்பனைத் தோற்றமாகவும் தெரிகிறது.

ஆத்மா அனுதி நித்யம் – அனுத்மா அனுதி அநித்தியம்.

மாலை மயங்குகிற நேரம்; மானிலத்தை இருள் கவ்வுகிறது. வழி நடந்து களைத்து வந்த ஒருவன், சேந்து கிணற்றின் ஓரமாக ஓர் பாம்பு சுருண்டு படுத்திருப்பதைப் பார்த்தான். பார்த்துப் பயந்தான்; பயந்து பதறினுன்; பதறி நடுங்கினுன்; நடுங்கி அலறினுன்; அலறிக் கூச்சலிட்டான். ஐயோ ! பாம்பு பாம்பு எனக் கத்தினுன்; கூக்குரலிட்டான். கூச்சல் கேட்டுக் கூடினர் பலர்.

'ஆ! பெரிய பாம்புடா! என்றான் ஒருவன். 'அடே! இது நாகப் பாம்புடா?' என்றான் மற்றவன். 'படமெடுப் பதைப் பாருடா:' இது பிறிதொருவன் 'தடி கொண்டா என்று சிலர் கூவ; 'பக்கத்தாலே நெருங்காதே; பாஞ்சு மேலே உளுந்து புடுங்கிடும்; இது கடிச்சா பாடை கட்டீ ரணும்' என்று கூட்டத்தில் பற்பலர் பலவாறாகக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் பண்ணினர் பயத்தால் நடுநடுங்கி வீழ்ந்து மூர்ச்சித்தவர்கள், காயமுற்றவர்கள். திகிலுற்றவர்கள் ஒரு சிலர். மகுடி வாசித்தான் ஒருவன்.

இத்தனை கூச்சல்கள் ஆரவாரங்கள் கோலாகலங்களுக் கிடையே அப்பாம்பு யாரையும் சட்டை செய்யாது 'மோன நிஷ்டையிலாழ்ந்த முனிவர் போல' அசையாமலிருந்தது. 'பத்தில் வீழ்ந்தால் பாம்பும் சாகாது' என்பது போன்றிருந்த நிலையில்; சிறிது புத்திசாலியான ஒருவன், 'என்னப்பா! இது; பாம்பா இருந்தா இத்தென சத்தத்துக்கும் சும்மாவா கெடக்கும்;' எனக் கூறி, ஒரு விளக்கை எடுத்து வந்த அந்த வெளிச்சத்தில் சிறிது தைரியமுடன் முன்னேறினான் அந்தப் பொல்லாத பாம்பே அசைவதாகத் தோன்றவில்லை. இன்னும் கொஞ்சம் துணிவுடன் நெருங்கினான். விளக்கின்
இன்னும் கொஞ்சம் துணிவுடன் நெருங்கினான். விளக்கின்
வெளிச்சம் படவே அது நன்றாக விளங்கியது.

'அது பாம்பு அல்ல! கயிறு' என்று அடடே! இது சேந்து கவுருடா! ஆரோ, தண்ணி சேந்திப்புட்டு சுருட்டி வெச்சுட்டு மறந்தாப்பலே போயிட்டாங்க, அட, பயித்தியக்கார முட்டாள் மனுசனுகளா? இதுக்கு இத்தனை ஆர்ப்பாட்டம், கலவரம் கூச்சல் எல்லாம்? நல்ல கூத்துடா?' என, வியப்புடன் கேலியாகக் குத்திப் பேசவே, எல்லாரும் தாங்கள் ஏமாந்ததை உணர்ந்து வெட்கப்பட்டு முகத்தில் அசடு வழியக் கூட்டம் கலைந்து போயினர்.

ஆன்மநேய அறிவாளர்களே! கூர்ந்து நன்கு கவனியுங் கள். கயிறு என்ற ஒரு பொருளே, அறியாமை எனும் அஞ்ஞான இருளில் பாம்பாகத் தோன்றியது. உண்மையில்

இருப்பது கயிறு. கயிறு காரணம்; பாம்பு காரியம். கயிறு என்று ஒரு பொருளும், பாம்பு என்று ஒரு பொருளும் ஆக இரண்டு பொருள்கள் அங்கு இல்லை. இருப்பது ஒரே ஒரு பொருள் தான். மற்ற ஆர்ப்பாட்ட செயலான காரியங்கள் எல்லாம்; பாம்பு என்கிற கற்பனைத்தோற்றமான பொய்மையின் அடிப்படையில் தோன்றலாயின. காரண-காரியங்கள் எனப் பெயரளவில் இரண்டாகத் தோன்றினும் மெய்ப் பொருள் ஒன்றேதான்.

இதுபோலவே; பரம்பொருளே, கற்பனையில் பாராதி அண்டங்களாகத் தோன்றுகின்றன. உண்மையில் பரம் பொருளைத் தவிர, ஜகத் என்கிற பாராதி அண்டமாயா கற்பித தோற்றமில்லை தேகாதி பிரபஞ்சங்கள் கற்பனையான பொய்த் தோற்றம் உண்மையில் உள்ளது பரம் பொருளே பாராதி அண்டங்கள் என்றும், பரம்பொருள் என்றும் பொருள்கள் இரண்டு இல்லை. இருப்பது ஒரே ஒரு பொருள்தான். இதுவே அத்வைத மார்க்கம்.

மற்ற காரியங்களெல்லாம் மாயையான துவித கற்பனையின் அடிப்படையில் விவகரித்துத் தோன்றுவன வாகும். பரம்பொருள் காரணம்; பாரதி அண்டங்களான ஜகத் காரியம். காரண காரியங்களெனப் பெயரளவில் இரண்டாகத் தோன்றினும் மெய்ப்பொருள் (பரம்பொருள்) ஒன்றே ஒன்றுதான். கானல் நீர் திருஷ்டாந்தமும் இது போலவே தான்.

"காரண காரியங்கள் ஏகம் — அதைக்
கண்டு தெளிவ தேவி வேகம் — அது
கானலின் கண்நீர் எனவும், ஆனதிந்தப் பார் எனவும்
காட்டும் — நிலை — நாட்டும்."

— [அத்வைதகீதம்]

மேலும், உண்மையான ஒரு பொருளை, அதற்கு எதிர் மாறுன வேருெரு பொருளாகக் காண்பதே ஆரோபம். இதை அடிப்படை அறியாமை 'எனவும் கூறப்படும்.

இந்த அறியாமை அகல ஆழ்ந்த அறிவாராய்ச்சியும், திர-மான குரு பக்தியும் வேண்டும்

"ஆரோபம் அத்தியாசம் கற்பனையாய எல்லாம்
ஓரோர் வஸ்துவினில் வேறே ஓரோர் வஸ்துவினை யோர்தல்."

மற்றும், நாமரூப திருசிய தோற்றங்களெல்லாம் கற்பனையே என்கிறது கைவல்ய நவநீதம் முதலான ஞான நூல்கள் .

"இப்படிப் போல நாம ரூபங்கள் இரண்டுமின்றி
ஒப்பமாய்இரண்டற்று ஒன்றாய் உணர்வொளிநிறைவாய் நிற்கும்
அப்பிரமத்தில் தோன்றும் ஐம்பூத விகாரமெல்லாம்
செப்பு கற்பனையினாலே செனித்த என்றறிந்துகொள்ளே"

அன்ப ! பொய்த் தோற்றம் புவனம் - மெய்ப் பொருள் பரம்பொருள் :

"கானல்நீர் கிளிஞ்சல்வெள்ளி கந்தர்ப்பநகர் கனவூர்
வானமை கயிற்றில் பாப்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாம் தறி புமானில் பிரபஞ்சமெல்லாம் பொய்யே
ஞானம் மெய்! மகனே உன்னை நம் ஆணை மறந்திடாயே."

இன்னும், கற்பனை கடந்தவனே ஞானி, எனக் கூறுவதும் காண்க !

"கற்பனை வந்தவாறு காட்டினோம் காண்ப வெல்லாம்
சொப்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானி-யாவான்."

— [மேலேயுள்ள பாடல்கள் கைவல்ய நவநீத ஞானநூல்]

ஆதலால், ஆன்ம தாகமுள்ள அன்பரே !

ஆன்மா அல்லாதது (அனாத்மா) என்பதும், முடிவான அதீதநிலையில் ஆன்மாவே (ஆன்மாவின் கற்பனையே) எனபதாக மெய்ப்பொருளுணர்ந்த ஞானிகள் அறிவார்கள். தன்னை அறியாத பெத்த நிலையில, ஆன்மாவும் கூட ஆன்மா அல்லாததாக அஞ்ஞானத்தால் தோற்றமாகிறது.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லாதவர்க்கு" — (திருக்குறள்)

"அந்த பிரக்ஞான கனமாகிய பிரம்மத்துக்கு வேருக ஒன்றுமில்லை. ஆனதால் ஜகத்தும் பிரம்மயந்தானென்பது தெரியப்படும்."

— [பிரகதாரண் யோபநிஷத் 4.11 சங்கரபாஷியம்]

எல்லாமாக உள்ள ஆன்ம (பிரம்ம) வடிவான என்னை ஆன்ம வடிவான நானே அதிகாலையில் வணங்கிக்கொள்ளுகிறேன்.

"வாழ்த்திடவும் வாயில்லை—வணங்கிடவுஞ் சிரமில்லை!
சூழ்த்திடவும் மலரில்லை-தொழுதிடவும் கரமில்லை!
எத்திடவும் பா இல்லை-எதிர்ந்திட வோரிறை இல்லை!
பார்த்தஇடம்தொறும்யானே!எனையானேபணிகின்றேன்"

— [சிவஞான வள்ளலார்]

குருவே துணை.

இதன் பயன்?

ஸ்லோகத் த்ரயமிதம் புண்ணியம்-
லோகத் த்ராய விபூஷணம்
ப்ராத காலே படேத் யஸ்து-
ஸ கத்சேத் பாமம் பதம், 11.

இதன் பொருள்

'மேலான நன்மை தரும் இம் மூன்று சுலோகங்களும் மூவுலகுக்கும் ஆபரணமாக அமைந்துள்ளன.

யார் இதை அதிகாலையில் கூறி (துதித்து வழிபாடுசெய்து கொள்ளுகிருரே அவன், சிறந்த பதவ்யான (சேவன் வீத்தத் தன்மையான) தை அடைந்து விடுகிருன். ஓம்,

சாந்தி! சாந்தி! சாந்தி.

ஓம்

தத் ❋ சத்

பின்னுரையில் என் உரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடைய அன்பர்களே !

உலகிலேயுள்ள மற்ற மத போதகர்களும், சமயச்சாரியர்களும், சகுணோபாசகர்களும், காரிய குருமார்களெல்லாம் தனக்கு அன்னியமாகப்பரம்பொருளைப் பாவித்து, கடவுளர்களாக – தெய்வங்களாக —சாமிபூதங்களாகத் திரிகரணங்களாலும் வழிபாடு செய்து வந்திருக்க, நமது **ஆதி சங்கர குரு பகவான்,** ஆன்மா ஆகிய தன்னைத்தானே திரிகரணங்களாலும் வழிபாடு செய்யும் புரட்சிகரமான **அத்வைத** மார்க்கத்தை அருளிச் செய்திருப்பது மிதவாதிகள் காணாத ஒரு புதுமையாகும்.

இதுகாறும் கூறியவற்றால், **ஆன்ம தத்துவத்தை** ஒருவாறு அறிந்திருப்பீர்களென நம்புகிறேன். சுருங்கக் கூறுமிடத்து,

> '**ஆன்மா** ஆகிய **நாமே,** பாராதி அண்டங்களான எல்லாமாகவும், மனம் வாக்குகளுக் கெட்டாத அரூப சைதன்யமாகவும், சாக்கிர — சொப்பன — சுழுத்தியாகிய மூன்று நிலைகளுக்கும் அப்பாலாய் **சாட்சி** மாத்ரமாகவும், சத் சித் ஆனந்தவடிவமாகவும், **பரம்பொருளாகவும்** தாஞன தன்மயமாய் **ஒளிர்கிறோம்.'**

இவ் வுண்மையை உள்ளது உள்ளவாறு உள்ளத்தில் உறுதியாக உணர்ந்து, தேகாத்மபுத்தியை ஒழித்து, தானான ஆன்மாவை அறிந்து, நின்மல **சிவம் ஆகி** நினைப்பற்ற **நிஷ்டையிலே** நிலைத்திருக்க வேண்டும். இந்நிலையடைய முதலில் குண்டலி **யோகப் பயிற்சி**யால் **மனதைக்** கட்டுப்படுத்த யோக ஞான நிஷ்டையாகிய **சாதனையை** அப்பியாசம் செய்ய வேண்டும்.

ஆன்ம சொருபத்தை அறிந்த பின் விடியற்காலையில் தூக்கம் நீங்கி எழுந்ததும் ஆன்ம உணர்வோடு அதையே உணர்ந்து — உணர்ந்து, நினைந்து — நினைந்து, ஆன்மாவில்

ஆழ்ந்து—ஆழ்ந்து அப்பேரின்பப் போதையிலே (மஸ்த்திலே) மூழ்கி ஆனந்தமான அறிதுயிலில் லயமாகித் தன் மயமாய்—ஆன்ம மயமாய் இலங்க வேண்டும்.

முத்திநெறி ஏக மயலும் முமுட்சுக்களே, ஆன்ம வடிவான தன்னை அறிய சிவ சாதனைகளைக் குரு உபதேச மூலமாக அறிந்து தினம்தினம் அப்பியாசம் செய்துவர வேண்டும். இல்லறவாசிகளும் எத்தொழிலைச் செய்பவர்களுங்கூட இந்த ஞானவழி முறைகளைத் தெரிந்து விடாமுயற்சியாக சாதித்து சாதனை செய்து வந்தால் காலா—காலங்களில் குருவருளால் பூரண நிஷ்டை அனுபவமாகி மெய்ப்பொருள் உணர்ந்து அதுவே ஆகி விடலாம். இது உண்மை,

யோகத்தால் ஆன்மா ஆகிய தன்னை அறிந்து, அப்பயிற்சியின் முடிவில் அதுவே யாகும் முடிவான சீவன் முத்திப் பதம் பெறலாம்.

இவ்வித யோக — ஞான உபதேசங்களை, குருநாதரிடம் நேரில் வந்து கேட்டறிந்து சிந்தித்துத் தெளிந்து ஆர்வத்துடன் அப்பியாசித்து ஆத்ம ஞானி ஆகலாம். முத்தியும் பெற்றுய்யலாம்.

> "ஹே! சீவர்களே! ஆத்மஞானம் பெற எழுந்திருங்கள். (அஞ்ஞானத் தூக்கத்திலிருந்து) விழித்துக் கொள்ளுங்கள், நல்ல ஞான குருவை அடைந்து (ஆத்மாவை) அறியுங்கள்." — [கடோபநிஷத் 3–14]

அவ்வித ஞான வழி அறிய, தேகம் விழும்முன் தெரிவதற்கு சேரவாரும் அன்பரே! தன்னை அறிந்த ஞானிக்கு மரண பயமில்லை. குருவே துணை. ஓம்.

இங்ஙனம்,

உமது ஆன்ம லாபத்தை விரும்பும்

பேட்டை வாத்தலை — தவத்திரு, P. அழகர்சாமி

14—8—87

ஆதிசங்கர பகவத் பாதாசார்ய ஞான குருவே துணை

ஆதி சங்கரர் —

அத்வைதியா?
அறுசமயவாதியா?

அத்வைதம் ஓர் அருமையான வேதாந்த முடிவு ஆகும். பிறவிப் பிணிக்குக் கைகண்ட ஔடதமாகும். முத்திக்கு வித்தாகும்.

அத்வைவம் என்ருல் இரண்டற்றது எனப்பொருள்படும். பலவற்றை ஒன்ருகக் காண்பதே -இரண்டற்று உணர்வதே அத்வைதம். 'ஏகம் அத்வைதீதம்' என்கிறது வேதம். எனவே, அத்வைதம் என்ருல் என்ன? அதன் பயன் யாது? என்பதைச் சுருக்கமாக உரைக்கிறேன்.

மனிதர்களான நமக்கு, உடம்பு என்கிற ஒன்று எதனுலோ—எப்பொழுதோ-எப்படியோ—எவராலோ ஏற்பட்டு விட்டது. அது உள்ள வரையிலும் பசி, தாபம், நித்திரை, மைதுனம் முதலான தேவைகள் ஏற்பட்டு அவைகள் நம்மைப் பாதித்துக் கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தீர்த்துத்திருப்தி செய்துகொள்ள அநேக காரியங்கள் செய்ய வேண்டிய திருக்கிறது.

அப்போது, அந்தநிலையில் தனக்கு சுகமாகவும் உபயோக மாகவும் இருப்பனவற்றில் விருப்பு (இராகம்) உண்டாகிறது. மாறுனவற்றில் வெறுப்பு (துவேஷம்) உண்டாகிறது. விருப்பு வெறுப்பு ஆகிய ஆசையும் — துவேஷமும் கூடிய செயல்களால் - கர்மங்களால் - இரு வினைகளாகிய பாவ-புண்ணியங்கள் ஏற்பட்டு அவைகளை அனுபவிக்க மீண்டும் இந்த உடம்பு (பிறவி) வந்துகொண்டே இருக்கிறது. புனரபி ஜெனனம் - புனரபி மரணம்' என ஆதி சங்கரர் அருளிய படி இந்த ஜெனன—மரண சம்சார பந்தத்திலிருந்து எப்படி நிவர்த்தி பெறுவது? பிறப்பிறப்பிலிருந்து நிவர்த்தி பெறு வது எவ்விதம்?

அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு அதாவது, 'உடல் என்னுடையதில்லை' என்று செய்து கொண்டால் — தேகமே ஆத்மா (நான்) என்கிற தேகாத்ம புத்தியை விட்டால், உடம்பு என்கிற வியாதி (பிறவிப்பிணி) தானுகவே தீர்ந்து போய்விடும்.

"தோற்றுடல் நான் எனுமைசுருதிகள் சொல்லும் முத்தி"
—(ஞானவாசிட்டம்)

தேகாத்ம புத்தியைத் தொலைப்பதெப்படி? அதுவா? தேகம் நான் அல்ல என்றால் 'நான் யார்?' எனும் பிரச்சினை எழுகிறது. ஆன்மா ஆகிய தன்னை அறிந்து அதுவே ஆவதே — இரண்டற்ற தாவதே அத்வைதம். இவ்வித சிரேஷ்டமான வேதாந்த ஆத்மஞான அத்வைத தர்மத்தை ஸ்தாபித்தவர் ஆதி சங்கர ஞான குரு ஆவார்கள்.

ஆதி சங்கரரின் அத்வைத சித்தாந்தத்திற்குப் பிறகுதான். விசிட்டாத்வைதம் ஸ்ரீ இராமானுஜராலும், துவைதம் ஸ்ரீ மத்வாச்சாரியராலும் சைவம் மெய்கண்டா ரவர்களாலும் மற்ற அறு சமய சித்தாந்தங்களும், உட்சமய புறச்சமயங்களும், சங்கரருக்குமுன் தோன்றிய புத்த சமண சித்தாந்தங்களும் காளான்கள் போலத் தோன்றலாயின, பரவலாயின. அத்வைதம் என்ற ஆதவனுக்கு முன்னுல் அவை அழகு இழந்து அவலமாயின.

ரிக் — யஜுர் — சாம— அதர்வண வேதங்களின் ஞான பாகமான; வேத இலட்சியமான உபநிடத அத்வைதக் கருத்துக்களையும் தத்துவார்த்தங்களையும் உலகுக்கும்— மக்களுக்கும் உணர்த்திய மகாபுருடர் - புருஷோத்மர் ஆதி சங்கரரே ஆவார். வேத உபநிடதங்களிலுள்ள, இலட்சியமாம் முத்தி அல்லது மோட்சபதம் மக்கள் அடைவதற்காகவே; ஆதிசங்கரர் அத்வைத மார்க்கத்தைப் பாரதத்தில் மட்டுமல்ல பாரினிலும் பரப்பினர்.

கர்மங்களாலும், மூட பக்தியினுலும், உருவ சகுணோபாசனைகளினுலும், துவைத பாவனைகளினுலும் பிரவிர்த்தி மார்க்கத்தினுலும், மற்ற அஷ்டமா சித்திகளினுலும், சரியை கிரியை—யோக சோபான மார்க்கங்களாலும் முடிவான, இனிப் பிறவா முத்தி கிடைக்காது — ஆத்ம ஞானம் கிட்டாது ஆன்மா ஆகிய தன்னை அறிய முடியாது என, துவைத வாதிகளையும், கர்ம காண்டிகளையும் வாதில் வென்று அத்வைத வெற்றிக்கொடி நாட்டினர்.

முத்திக்கு வித்தான அத்வைதக் கொள்கையை நிலை நாட்டவே, தனது இளம் பிராயமான பதினறு வயதிலேயே துறவு பூண்டு சன்னியாசி ஆகி, பரத கண்டம் முழுவதும் கன்னியாகுமரி முதல் இமயம்வரை பாதயாத்திரைபுரிந்தார்.

கர்ம காண்டிகளான குமாரில பட்டர் அவர் சீடர் மண்டன மிசிரர் போன்ற கர்ம வாதிகளையும்; புத்தர் சமண பேதவாதிகளையும், சாங்கிய —நாஸ்திக — மீமாம்ஸ விதண்டா வாதிகளையும், நாம—ரூப உபாசன சகுணோபாசனவாதிகளையும், துவித பாவனவாதிகளையும் வாதில் வென்று அத்வைத தர்மத்தை நிலை நாட்டினர். மற்றோர்களான அவர்களையும் தனது சீடர்களாகவும் மாற்றி விட்டார் அதுவுமின்றி, அத்வைத மடபீடங்களாக நான்கு மடங்களை மட்டும் தோற்றுவித்து, சீடர்கள் சிலரை மடாதிபதியாகவும் ஆக்கினர்.

"இருப்பது சத் ஒன்றே! அது அது ஆகி, அதுவே ஆத்மா ஆகி (நான் ஆகி), அதுவே அண்டசராசரங் களான மாயா தோற்றங்களாகவும் பரணமித் துள்ளன."

எனும் சுத்தாத் வைத தத்துவங்களை மக்கள் மத்தியில் பரப்பி; தனது 32ஆம் வயதிலேயே உடற் கூட்டை விட்டு பிரம்மத்தில் கலந்துவிட்டார். அவரது கொள்கை விஞ்ஞான ரீதியில் மெய்ஞானமாகப் பரவியது.

"சங்கரராக இருக்கட்டும்! இராமானுஜராக இருக்கட்டும் மாத்வராக இருக்கட்டும் ஒவ்வொருவரும் தங்களது மதமே; தாங்கள் சொல்லியதே -வேதாந்தத்தின் சாரம் என்று கூறி வந்தார்கள் என்றாலும்; இன்றைக்கு நம் நாட்டிலும் சரியே மேல் நாட்டிலும் சரியே! வேதாந்தம் என்னும் சொல் லானது, ஆதிசங்கரருடைய அத்வைத மதத்தையே குறிப்பதாகவே பொருள் கொள்ளப்படுகிறது."

— [சுவாமி விவேகானந்தர்]

சைவம்—வைஷ்ணவம் – சாக்தேயம்— கணபத்யம்— கௌமாரம் - சௌரம்-ஆகிய அகச் சமயங்களும், புத்தம்— சமணம் போன்ற புறச் சமயங்களும் விசிட்டாத்வைத — துவைத சித்தாத்தங்களும் ஆகியவை, உருவ வழிபாடு உள்ளன. அத்வைதத்துக்கு இவைகள்; சமயங்கள் புறம் பானவை.

இப்படிப்பட்ட துவைத கொள்கையுடைய சண்மதங் களை — அறுசமயங்களை— ஆதிசங்கரர் ஸ்தாபிக்கவுமில்லை; அந்தச் சமய தெய்வங்களை வழிபடவுமில்லை; ஸ்தோத்திர சுலோகங்கள் பாடிடவுமில்லை. அந்த, துவித சமய வழிபாடு களையும்- தோத்திர சுலோகங்களையும் ஆதிசங்கரருக்குப்பின் வந்த சங்கரமட மடாதிபர்களாக நியமிக்கப்பட்டு வந்த சங்கராச்சாரியர்களால் ஆக்கப்பட்டு, ஆதிசங்கரர் அருளிய தாக ஏமாற்றம் செய்யப்பட்டதாகும்.

முமுட்சுக்களாகிய மெய்யன்பர்களே! உங்கள் ஞான அறிவைக் கொண்டு சிந்தித்துப் பாருங்கள்; உண்மை விளங்கும்.

ஸ்ரீ ஆதிசங்கரர் : கி. பி எட்டாம் நூற்றாண்டில் காலடி என்னும் ஊரில் பிறந்தார். 'எங்கும் நிறைந்தது பரமாத்மா; உடலிலுள்ள உயிர் ஆத்மா; ஆத்மாபரமாத்மா ஆவவே முக்தி; பரமாமாத்வும் ஆத்மாவும் ஒன்றே.' இவர் போதித்த மார்க்கம் அத்வைதம்.

ஸ்ரீ இராமானுஜர் : கி பி. பதினோறாம் நூற்றாண்டில் ஸ்ரீ பெரும்புதூரில் பிறந்தவர். வைஷ்ணவர். 'பரமாத்மா வின் ஓர் அங்கமே ஜீவாத்மா ; எல்லா உயிர்களுக்கும் தொண்டு புரிவதால் மக்கள் முக்தி அடையலாம்? இவர் போதித்த மார்க்கம் விசிட்டாத்வைதம்.

ஸ்ரீ மத்வர் : கி பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் தென் கன்னட உடுப்பியில் பிறந்தவர். 'ஜீவாத்மா என்பது வேறு, பரமாத்மா என்பது வேறு முக்தி அடைந்தாலும் ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவதில்லை. பகவத் அருள் பெறப் பக்தி அவசியம். இவர் போதித்த மார்க்கம் துவைதம்.

[இந்து தேச வரலாறு]

ஆதிசங்கரர் அறுசமயத்தை ஸ்தாபித்திருந்தால், அவர் பின் வந்த ஸ்ரீ இராமனுஜருக்கும் ஸ்ரீ மத்வருக்கும் வேலையே இல்லை: என்பதைக்கவனியுங்கள்; சிந்தித்து மெய்ப் பொருள் காண்பீராக. ஆதிசங்கரர் அறுசமய வாதியாக இருந்தால், அவர் அத்வைதியாக இருக்கவும் முடியாது. அக-புற சமயங்களான பிறமத துவாதிகளை வாதில் வெற்றி கொண்டிருக்கவும் முடியாது; என்பதைச் சந்தேக மின்றி அறிந்து கொள்வது அவசியமாகும்.

துவைதக்கதை ஒழிக்கக்கட்டி வதன் சமாதியின் மேலே, தான் அத்வைத ஞானக் கோட்டையைக் கட்டி நிலை நாட்டி சுத்தாத்வைதத்தை ஸ்தாபித்தார், ஆதிசங்கரர்.

'ஆனை சிறுத்து ஆட்டுக்குட்டி ஆனதைப் போல' அத்வைத தர்மத்தை ஸ்தாபித்துப் போதித்த ஆதிசங்கர குருவுக்குப் பின், அவர் பேரைப் பூண்டு வந்த சங்கர மடாதிபதிகளான சமய சங்கராச்சாரியர்கள்; மற்ற துவித சமயாச்சாரிகள் போல தாங்களும் சமய தெய்வங்களையும் சமய ஆசார அனுஷ்டானங்களையும், சகுணோபாசனைகளான உருவ வழி பாடுகளையும், காமிய – கர்ம தவ விரதங்களையும் கைக் கொண்டு, அவை ஆதிசங்கரர் வழிபட்டவை என உண்மைக்கு மாறாகக் கூறி, அத்வைத கொள்கைகளைக் கொன்று புதைத்து விட்டு, அந்த சமாதி மேல் துவைதபாவனைத் துளசி மாடத்தை அமைத்துக் கொண்டு சுயநலம் பாராட்டி உலகாயதத்தில் உலாவுகின்றனர்.

இப்போதுள்ள சங்கர மடாதிபதிகள், பாழ்பட்டகோவில் களைப் பார்வையிடவும், அவற்றைப் புதுப்பிக்கப் பொது மக்களை ஏவியும் புண்ணியார்ச்சனை புரியவும், கும்பாபிஷேகம் செய்யவும், உருவ வழிபாடுகளை உயர்த்திப் பேசியும்- இடையிடையே மக்களை மயக்க ஆங்காங்கே வேதாந்தா வார்த்தைகளையும் சிறிது கலந்து பேசியும் துவைதத்தை நிலை நாட்டுகிறார்கள் இந்த ஏமாற்று வித்தையை மக்கள் அறியாது கலக்க முறுகின்றனர்.

இன்னும், ஐயப்பசாமி-கருமாரியம்மன் போன்ற புதுப் புதுக் கற்பனைத் தெய்வங்களையும் பிரபலப்படுத்திப் பிரசாரம் செய்து மக்களை மௌடீகத்தில் ஆழ்த்தி வருகின்றனர். இனி மேல் ரோடுகளிலுள்ள பழைய மைல் கற்கள் கூடச் சாமிகள் ஆகி விடுமோ? என்னமோ அறியேன் பராபரமே.

இந்த விதமாக மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி, மிகச் சிறுபான்மையினரான சில கூட்டத்தினர், கடவுள் பேராலும் மத – சமயங்களின் பேராலும் மக்களை - பாமர

சனங்களை - ஏமாற்றித் தங்கள் சுகபோக வாழ்வை ஸ்திரப்படுத்திக் கொள்கிறார்கள்.

'உருவ வழிபாடுகளாலும், சமய ஆசார அனுஷ்டான கர்மங்களாலும். காமிய கர்ம விரதச் செயல்களாலும். ஆலய தீர்த்த க்ஷேத்ராடனங்களினாலும், சரியை - கிரியை சகுணோ பாசனைகளாலும் சில உடல் விடய போக காமிய சித்திகள் பெறலாமே தவிர, இனிப் பிறவா சாயுட்சிய முக்தி சித்திக்காது' என்று ஆதிசங்கர குருநாதர் மிக வற்புத்திக் கூறியுள்ளதை அன்பர்கள் முன்பு சமர்ப்பிக்கின்றனன். அதை வாசித்து உண்மையை உணருங்கள்.

"ஓதிய பலவாம் நூலை ஒழுங்குறப் படித்துமென்ன?
தீதிலாத் தேவர் தம்மைத் தினமும் அர்ச்சித்தும் என்ன?
நீதியாம் கர்மம் யாவும் நித்திமும் செய்தும் என்ன?
கோதிலா தெய்வம் தன்னைக் குறித்து உபாசித்துமென்ன?

"ஈது அலால் இன்னம் இங்கண் எத்தனை முயற்றி என்ன?
ஆதியாம் 'பரஜீவ ஐக்யம்' அறிந்திடும் அறிவாலன்றி
ஒதொணுக் கற்ப கோடி யுற்ற காலத்தினாலும்
கோதிலா முத்தி சித்தி கூடுவ தென்றுமில்லை."

"சாதுவே சந்ததம் நீ சகல கர்மங்கள் விட்டே
ஆதியில்லா அவித்தை ஆக்கிய பந்தம் தன்னை
கோதிலா முத்தி தன்னைக் குறைவறத் தேடுவாய் இவ்
ஏதமாம் தேகம் தன்னை எள்ளளவு(ம்) நம்பிடாதே."

மேலும், கர்மங்களில் முத்தி கிட்டாதெனவும் அறிவுறுத்து கிறார்.

"சுருதியை நம்பினோர்க்குச் சொன்னதாம் கர்மம்
நிஷ்டை மருவிடும் அவற்றினாலே மன்னிடும் சித்தசுத்தி."

மற்றும்;

"சாதுவே இந்த ஆன்மா சனனமாகான் மரிக்கான்
ஏதுமே வளர்வுறுன் மற்று இளைத்திடான் விகாரியாகான்
ஏதமாம் இந்ததேகம் இறக்கினும் இறவான்; நித்தன்
பேதமாம் கடம்இறக்கில்பெருகுவான்இறப்பதுண்டோ?

"வீடுறும் விருப்பத்தாலே விவிதமாம் விடயத்தின்கண்
ஏடணை விட்டுக்கர்மம் யாவையும் துறந்து அன்போடே
நீடுறும் சிரவணாதி நிஷ்டையில் நிற்பவன்தான்
மூடிய மனோவிகாரம் முழுவதும் விடுத்தோனுவான்."

"பிரம்மமே யாகும் ஞானி பின்னர்இச் சம்சாரத்தை
மருவிடான் ஆதலாலே மாசற்ற முமுட்சுவானோன்
பிரம்மம்நான்! பிரம்மமேநான் பிரம்மமேநான் என்றிங்கண்
திரமதாய்ப் பிரம்மம் தன்னைத் தினமுமே அறியவேண்டும்.

"யாதினுல் பிரம்ம மன்றி யாதுமே வேறிங்கில்லை;
ஆதலால் அதுவே உண்மை; யாதுதான் எவர்க்கும் ஆன்மா?
யாது அத்துவிதம் சாந்தம்? அமலமாம் பரமம் என்றும்
சாதுவே அது நீ ஆவாய் (தத்துவமசி) சந்ததம் ஐயமில்லை."

இன்னும், பிரஸ்தானத்திரய பாஷ்யங்களிலும் பற்பல சான்றுகளுண்டு.

— [மேலே மேற்கோள் காட்டியவை விவேக சூடாமணி, திருக்திரிசய விவேகம், நிர்வாண ஷட்கம், பிராதஸ்மரண தோத்திரம், ஹஸ்தாமலகம், மனுஷா பஞ்சகம் முதலானவற்றிலும் காண்க.]

ஆதிசங்கர சுவாமிகள் மட்டுமன்று; பின்னுல் வந்த அத்வைதக் கொள்கையுள்ள ஆத்மஞான அனுபூதியடைந்த பலரும் அறுசமய வழிபாடுகளையும்—உருவ வழிபாடு பூசை கிரியைகளையும் ஆதரிக்கவு மில்லையே? கண்டித்திருக்கின்றார்களே! சரியை-கிரியையாதிகளை, உருவவழிபாடுகளை (ஞானம் அடையும்முன்) முதலில் கூறியபோதிலும், பாடலில் பாடிய போதிலும், பின்னுல் ஆத்ம ஞானம் பெற்று, உருவ- சமய

வழிபாடுகளை மறுத்து அத்வைதக் கொள்கையையே ஸ்தாபித்து சீவன் முத்தர்களாயினர்.

— ஒரு பானை சோற்றுக்கு ஓர்சாதம் பதம் பார்ப்பதுபோல பாடல்கள் காண்க]

திருமூலநாயனார்

"ஆயத்துள் நின்ற அறு சமயங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக்குழியில் வீழ்வர்! மனை மக்கள்
பாசத்துட் சிக்கிப் பதைக்கின்றவாறே."

"காயக் குழப்பனை காயநன் நாடனை
காயத்தினுள்ளே கமழ்கின்ற நந்தியை
தேயத்துள்ளே எங்கும் தேடித் திரிவார்கள்
காயத்துள் நின்ற கருத்தறியாரே."

சிவஞான வள்ளலார்

"பூசை என்பது பூவோடு பாணியோ?
ஆசை கோபம் அகந்தை அகற்றியே
நேச ஐம்பொறி நெஞ்சுள் நிறுத்தியே
ஈசனைத் தத் இதயத்துட் காண்டலே."

சிவவாக்ய சித்தர்

"கோயிலாவ தேதடா குளங்குளாவ தேதடா!
கோயிலுங் குளங்களும் கும்பிடும் குலாமரே;
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அறிவதும், இல்லை! இல்லை! இல்லையே."

"செங்கலும் கருங்கலும் சிவந்தசாதி லிங்கமும்
செப்பிலும் திராவிலும் சிவன் இருப்பன் என்கிறீர்
உம்பதம் அறிந்துநீர் உன்னையே அறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாதர் ஆடல் பாடலாகுமே."

நிஷ்டானுபூதி

''சரியையின் தொழிலினாலும் சற்கிரியையினும் யோகம்
புரிதரும் முயற்சியாலும் பொருந்தொணா தென்பர்–
மேலோர்
உரிய தேசிகன் உரைக்கும் ஒருமொழி உண்மையாலே
அரிய மெய்ஞான வீடு இங்கு அடைவது திண்ணமாமே''

அருட்பிரகாச இராமலிங்கசுவாமிகள்

''சாதி குலம் என்று சமயம் மதம் என்றும் உப
நீதியில் ஆச்சிரம நீட்டென்றும் - ஓதுகின்ற
போய் ஆட்டமெல்லாம் பிதிர்ந்து ஒழிந்தனவே பிறர்தம்
வாய் ஆட்டம் தீர்ந்தனவே மற்று.''

''குறித்துரைக்கின்றேன் இதனைக் கேண்மின்! இங்கேவம்மின்;
கோணும் கனக் குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்த உம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் என்று
மெய் உரையைப் பொய் உரையாய் வேறு நினையாதீர்
பொறித்த மதம் - சமயம் எல்லாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர்! சிவம் ஒன்றே பொருள் எனக்கண்டு அறிமின்''

''சாதி சமயச் சழக்கை விட்டேன் - அருட்
சோதியைக் கண்டேனடி ... அக்ச்சி''

பட்டினத்தடிகளார்

''சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியுலும்
மல்லிலும் மாசற்ற ஆகாயந் தன்னிலும் ஆய்ந்து விட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும் ஈசன் இருக்கும் இடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எந்தன் கண்ணுதலே.''

திருப்புகழ் அருணகிரி நாதரும் முடிவில் அருளுவது காணீர்;

''ஓலமறைகள் அறைகின்ற ஒன்றது
மேலைவெளியில் ஒளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை கிரியையும் புணர்ந்தவர் - எவராலும்

ஓத அரிய துரியம் கடந்தது
போத அருவ சொரூபப் பிரபஞ்சமும்
ஊனும் உயிரும் முழுதும் கடந்த - சிவஞானம்''

''சரியை யாளர்க்கு மக் கிரியை யாளர்க்கும் நற்
சகல யோகர்க்கும் எட்ட - அரிதாய
சமய போதத்தினுக்கு அணுகொணாத மெய்ப்பொருள்
தரு பரா சக்தியில் - பரம் ஆன''

''தசையும் உதிரமும் நிணமொடு செருமிய
சகல கிருமிகள் ஒழுகிய பழகிய
சடல உடல் கடை சுடலையில் இடுசிறு-குடில்பேணும்

சகல கருமிகள் சருவிவ சமயிகள்
சரியை - கிரியைகள் தவம் எனும் அவர்சிலர்
சவலை அறிவினர் நெறியினை விடஇனி-அடியேனுக்கு''

மெய் அன்பர்களே! இந்தப்படியாக, உலக வாழ்க்கையில் உழன்றவர்களும், சம்சாரபந்தத்தில் சிக்கியவர்களுமே, சரியை - கிரியை யாதிகளையும், சமயங்களையும் - உருவ வழிபாடுகளையும் தாக்கி அறிவுறுத்தும் போது, சந்நியாச ஆசிரமம் பெற்ற துறவியும், அதிவர்ணாச்சிரமியும்-அத்வைதக் கொள்கையையே ஸ்தாபித்தவரும், அதை உலகில் பரப்பியவரும் ஆகிய ஆதி சங்கர பகவத் பாதாசாரியர், அறுவகை சமயங்களையும் போதித்தார் என்றால், அது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்ட, அம்மாவாசைக்கும்-அப்துல்காதருக்கும் ஏற்பட்ட சம்பந்தம் போலாகும்.

மேலும் அறிவுறுத்துகிறார் ஆதி சங்கரர் உடலறி விளக்கத்தில் கவனியுங்கள் ;

"எறும்பு கடையானைமுதல் பேதாபேதம்
எண்பத்து நான்கு நூறாயிரத்துள்
உறும் பொருளாய் நின்ற சிவம் ஒருவன் தன்னை
உள்ளுணர்ந்து காண்பதுவே காட்சி ஞானம்
பெறுமவனைப் புறம்என்று பேசும்மாந்தர்
புறம் புணர்ந்து காண்பது அரிதாகும் என்றே
விறுமன் மறைநூலும் உரைத்திடும்! அலர்க்குள்
மிக்க மணம்போல் பரத்தை மெய்யில் காணே."

ஆதி சங்கரருக்கு வெகு காலம் பிற்பட்டு வந்த சங்கர மடாபதிகள், மற்ற துவித மார்க்க மடாபதிகள் உருவ வழிபாட்டால், மக்களிடம் செல்வாக்கும் மதிப்பும் செல்வமும் பெருகி வருவதைக்கண்டு, தாங்களும், அத்வைதியாகிய ஆதி சங்கரரை துவைதியாக்கி, அறு சமயவாதியாக்கித் தங்கள் சுயநல வாழ்வுக்குத் துணையாகக்கொண்டனர். பற்பல ஸ்மிருதிகளையும், புராணங்களையும், இதிகாசங்களையும் படைப்பித்து விட்டனர். அவற்றின் கதாநாயக நாயகியர்களைக்கடவுளாகவும், அவதார புருடர்களாகவும் செய்வித்து கோவில்கள் கட்டுவித்து, தெய்வங்களாக வணங்கவும் வழிபடவும் செய்வித்து விட்டனர் மக்களை.

இந்துக்களாகிய நமக்கு சனாதன வேதங்களாகிய, இருக்கு - யஜுர்-சாம - அதர்வண வேதங்களும், திருக்குறளும் மறைமொழிகளாக உள்ளன. வேதங்கள், அறிவே கடவுள் - ஆன்மாவே கடவுள் - முடிவில் நீயே கடவுள் ஆகிறாய் (தத்துவமசி) என்று கூறி, அறம் — பொருள் — இன்பம்— வீடு (முத்தி) அடைய சாதனங்களை வலியுறுத்திப் போதிக்கிறது.

புராண — இதிகாசங்கள் வேதங்கள் அல்ல. காலத்துக் கேற்ப மாறுபடுவன. நமக்கு வேதங்களே அடிப்படை ஆதாரங்களாகும். சென்ற நூற்றாண்டின்

சாது தயானந்தசரஸ்வதியவர்களின் ஆரிய சமாஜ கொள்கையும இதைமய வலியுறுத்துகிறது.

'வேத காலத்துக்குத் திருமபுங்கள். வேதங்களுக்குப் பிறகு இந்து சமுதாயத்தில் ஏற்பட்ட மூடப்பழக்க வழக்கங்களைக்களைந்தெரிய வேண்டும். மக்கள் எல்லாரும் ஒரே கடவுளை - பிரம்மத்தை- வழிபடவேண்டும். உருவ வழிபாடு கூடாது' ஆத்ம வழிபாடு புரியங்கள் என்பதே தயானந்தர் அறவுரையும அறிவுரையமாகும். ஆதிசங்கரரின் அத்வைத தர்மத்தை ஆதரித்தவர்.

''எவன், தனக்கு அன்னியமாகக்கடவுளைக் கருதுகிருனே அவன் அறியாமையால் மூடப்பட்டவனுவன்.''

என்று அறை கூவுகிருர் அகிலப் புகழ் வாய்ந்த ஞானவீரர் சுவாமி விவேகானந்தர்.

ஆதலால் மெய்ப் பொருள் நாடும் முமுட்சுக்களே!.

நமது வேதங்கள் கூறும் முத்தி நெறியை நாடுங்கள்; சுத்தாத்வைத மார்க்கத்தைக் கைப்பற்றுங்கள். ஆதிசங்கரரின் அத்வைதக் கொள்கைகளையும், அறிவுரைகளையும், ஆத்ம ஞானபோதங்களை மட்டும் நம்புங்கள. ஆதிசங்கரர் கேரள நம்பூதிரி பிராமணராயினும், அவர் சாதி சமயங் கடந்த அத்வைத வேதாந்த சன்யாசி. பிராமணர்களுக்குரிய பூணூல் கிடையாது. சமய வேடங்கள் இல்லை. வர்ணுச்சிரமமில்லை. அவர் அதிவர்ணுச்சிரமி யாவார்

பின்னல் சங்கரர் பேரைவைத்து வழங்கிவந்த இடையிலேற்பட்ட மடாபதிகள், தாங்கள் சொல்லிய - இயற்றிய- சில சமஸ் கிருத சுலோகங்களை ஆதிசங்கரர் கூறியதாக அவர் மேல் சுமத்தி, அவரையும் அறுசமய துவைதியாக்க அரும்பாடுபட்டுப் பிரசாரம் செய்கிருர்கள்! அன்பர்களே! அதை நம்பாதிர்கள். சமயக்கடவுள்களையும், சாமி பூத உருவ வழிபாடுகளையும் உதறித்தள்ளி ஒதுக்கி விட்டு விடுங்கள்.

நமது வேதங்கள் அருளிய நிவர்த்தி மார்க்கமாகிய ஆத்ம ஞான வழியை-ஆதிசங்கர பகவத் பாதகுருவழி காட்டிய அத்வைத தர்மத்தை-முத்தி நெறியைக் கடைப் பிடியுங்கள். நம் போன்ற இல்லறத்தார்களுக்கே தான் வேதாந்த தர்மம் அருளிச் செய்யப்பட்டுள்ளது. வேதாந்தம் மனித வாழ்வுக்கு வழி காட்டியாகும்.

'யோகத்தால் தன்னை அறிந்து
ஞானத்தால் அதுவே ஆகி,
இனிப்பிறவா முததி அடைய சாதனை புரிவீர்களாக!
மோட்சம் நமதே ;

குரு வாழ்க ! குருவே துணை.

ஓம்
தத் ※ சத்

குறிப்பு

●

விபரம் தெரிய வேண்டுமானல்

விவேகசூடாமணி —

கைவல்ய நவநீத வசனம் —

ஞானனுபூதி வேத போதம் —

வாங்கி வாசித்து ஆத்வ லாபப் அடையுங்கள்.

நேரில்

ஞானயோகி இரத்தின சற்குரு

அவர்களிடம்

யோக ஞான உபதேசம் பெறலாம்.

வருக ! வந்து நலம் பெறுக !

பிறவிப் பிணி நீக்கல்
அல்லது
பவரோக நிவாரணி

உலகில் மக்களின் உடல்களுக்கு ஏற்படும் துன்பம் பிணி ஆகும். பிணி என்பது நோய் அல்லது ரோகம் எனப்படும். உடல் பிணி தேகத்தை வருத்தி மரணத்தை உண்டு பண்ணுகிறது. உடற்பிணியை விடக்கொடியது பிறவிப் பிணியாகும் இது ஜீவனைப் பீடித்த நோய். ஆன்மாவின் பிரதி பிம்பமான ஜீவன் அந்த காரணத்தால் அதாவது மனதின் சம்மந்தத்தால், ராகதுவே சாதிகளின் ஆசா பாசத்தால் பாவ புண்ணிய கர்மங்களை உடலால் செய்து மீண்டும் பிறப்பு இறப்புக்கு ஆளாகிறது. "புனரபி ஜனனம் புனரவி மரணம்" என்னும் ஆதி சங்கரஜகத்குரு அருளியபடி, ஜீவன் கர்மச்சக்கரத்தில் சிக்கி சம்சார பந்தமான பிறவித் துன்பத்தில் சுழன்று பிறப்பிறப்பு எய்துகிறது. இவ்வித பவரோகமான பிறவித்துன்பத்தை அகற்றவே பலமதங்களும், சமயங்களும் கூறுகின்றன.

தமிழ் மறையான திருக்குறளில் மருந்து எனும் அதிகாரத்தில் பிணி நீக்கும் உபாயம் கூறப்பட்டுள்ளது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

நோய் இன்னதென்று ஆராய்ந்து நோயின் காரணத்தையும் ஆராய்ந்து அதை அகற்றும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று"

மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்று தமிழ் மறை கூறுகிறது. உடலுக்கு, வாத, பித்த, சிலேத்தும் ஆகிய குறைகள் ஏற்பட்டுள்ளது போல, ஜீவனுக்கும் மலம், விட்சேபம், ஆவாணம் என்னும் குறைகள் ஏற்பட்டுள்ளன அதனால் ஜீவனுக்குப் பவரோகம் எனும் பிறவிப்பிணி ஏற்பட்டுள்ளது. பிறவி ஒழிவதே பேரின்ப முக்தி என வேதங்கள் பிரதிபாதிக்கின்றன. இறைவனோடு இணைந்த அத்வைத நிலை பிறவி ஒழிந்தால் ஏற்படும் எனவே நோய் [பிறவிப் பிணி] இன்னதென்று முதலில் ஆராய்வாம்.

மனிதனுக்கும் உடம்பு என்றவியாதி எதனாலோ எப்பொழுதோ எப்படியோ, யாராலோ ஏற்பட்டு விட்டது. அந்த உடல் உள்ளவரையில் பசி, தாகம், நித்திரை, மைதுனம், முதலிய தேவைகள் ஏற்பட்டு அவைகள் உடலைப் பாதித்துக் கொண்டேயிருக்கின்றன. அந்த உடலின் தேவைகளைத் தீர்த்து திருப்தி செய்து கொள்ள உடலோடு கூடிய மனிதன் அநேக காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

அப்போது அந்த நிலையில் தனக்கு உபயோகமான சுகம் தரக்கூடிய வஸ்துகளில் ஆசை [இராகம்] உண்டாகிறது. மாறுன தனக்குத் துன்பம் தரும் வஸ்துக்களின் மீது

வெறுப்பு [துவேஷம்] ஏற்படுகிறது. இராகம் என்னும் ஆசையும், துவேஷம் என்னும் வெறுப்பும் கூடிய செயல்களால்-கர்மங்களால் இரு வினைகளாகிய பாவ புண்ணியங்கள் ஏற்பட்டு மீண்டும் இவ்வுடம்பு—பிறவி வருகிறது.

பெரும்பான்மையான மதங்கள் பிறவி உண்டு என்று நம்புகின்றன. தமிழ் மறையான திருக்குறளும்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்று கூறுகிறது. எனவே பிறவி உண்டு என்ற அடிப்படையில் பிறவி ஒழிப்பைப் பற்றி ஆராய்வோம். பிறவி எடுத்து எடுத்து இறந்து இறந்தே உழன்ற மக்களுக்கு பிறவி ஒழிக்கும் உபாயத்தை ஞானநூல்கள் உணர்த்துகின்றன. தேகம் என்று இல்லாவிட்டால் மனிதனுக்கு துன்பமோ துக்கமோ வேதனையோ வியாதியோ ஏற்பட நியாயமில்லை. எனவே இனிப்பிறவா நிலையைப்பற்றி ஆராய்வோம்.

"பிறந்தார் உருவது பெருகிய துன்பம்
பிறவார் உருவது பெரும் பேரின்பம்"
— மணிமேகலை

மாதா உடல் சலித்தாள், வில்வினையேன்கால் சலித்தான்
வேதாவும் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பூர் வாழ்சிவமே! இன்னமோர் அன்னை
கருப்பையூர் வாராமல்கா"
—பட்டினத்தார்

பிறவித் துன்பத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

பிறப்புக்கு முதல் காரணம் மூலகாரணம் அஞ்ஞானம் என்னும் அறியாமையே ஆகும்.

மனிதன் தன்னுடைய உண்மை வடிவை-நிஜ சொரூபத்தை அறியாததே.

''பிரம்மமாம் தனைமறந்த பேதமையே
அஞ்ஞானம்'' — கைவல்ய நவநீதம்

மனிதன் தன் உண்மை வடிவமான சத்—சித் ஆனந்த சொரூபன் என்பதை மறந்து அழியக் கூடிய அனுர்த. ஜட துக்கமயமான பிணமாகும் தேகத்தை நான் என்று அபிமானிக்கதால் பிறப்புக்கு ஆளாகிறுன். அழியக் கூடிய நிலையற்ற மண், பெண், பொன் ஆகிய மூவாசையினுல் பீடிக்கப்பட்டு பாவ புண்ணிய கர்மங்களைச் செய்வதால் பிறவிக்கு ஆளாகிறுன்.

''அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா அப் பிறப்பீனும் வித்து'' — தமிழ்மறை

''ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம் கட்டி ஆழினும்
கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்
அழகேசன் நிகராக அம்பொன் மிக வைத்து பேரும்
நேசித்து ரசவாத வித்தைகளைந்திடுவார் நெடுநாள்
இருந்த பேரும்
நிலையாகவே இன்னும் காயகல்பம் தேடி நெஞ்சு புண்ணுவர்
— எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதுவும் உறங்குவதும்
ஆக முடியும்
உள்ளதே போதும்! நான் நான் என
ஒன்றை விட்டு ஒன்றுபற்றிப்
பாசக் கடலினுள் வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை
அருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண ஆனந்தமே''

எனவே பிறவிப்பிணிக்குக் காரணம் ஆசையே ஆகும். அது கணிக்கும் வாய் நாடி: பிறவிப் பிணியை ஒழிக்கக் கூடிய வழியை நாடல்

வாய்ப்பச் செயல் = அதன்படி செயல்படல். மனிதர்களுக்கு ஏற்பட்ட உடற்பிணியைப் போக்குவதற்கு மருத்துவ முறையில் நான்கு பாகுபாடுகள் உள்ளன. அவை-நோயுற்றவன் நோய்தீர்க்கும் மருத்துவன், நோய், தீர்க்கும் மருந்து அதை சரியான முறையில் செயல்படுத்தச் செய்வது ஞான சாதனையாகிய தவம்.

யுகயுகாந்திரமாக பற்பல பிறவிகளான
"புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி
பல்மிருகமாகி பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராய் முனிவராய் தேவராய்
செல்லாய் நின்ற இத்தாவர
சங்கமத்துள் எல்லா பிறப்பும் பிறந்து
இளைத்து" — திருவாசகம்

நொந்து அழுது இனிபிறவி வேண்டேன்! ஒழியாப் பிறவி எடுத்தெடுத்தே உழன்றது போதும் போதும்! என அஞ்சி அலமருந்து பிறவிப்பிணி தீர்க்கும் பல மருத்துவர் களை குருமார்களை தேடிஅலைந்து காண்கிறுன். பிறவிப் பிணியைத் தீர்க்கிறேன் என்று சைவசமய மருத்துவர் வந்துற்றுர்' பிறவிப் பிணியால் பீடிக்கப்பட்ட அன்பரே! பிறப் பொழிக்கும் பெருமான்சிவ பெருமான் ஒருவரே! மாயப்பிறப் பறுக்கும் மன்னன்! அல்லற் பிறவியறுக்கும் அறன் ஒருவனே! பஞ்சாட்சரமாகிய நவச்சிவாய—சிவாய நம என்று உச்-சரித்தாலே பிறவிப்பிணிப்பஞ்சாய்ப் பறந்து விடும். மற்ற தெய்வங்களால் உன் பிறவிப் பெருநோயைத் தீர்க்க முடியாது. பல பிறவிகள் எடுத்த பெருமாளால் உன் பிறவியைப் போக்க முடியுமோ? முடியாது.

''கண்ணபுரம் மாலே கடவுளிலும் நீ அதிகம்
உன்னிலும் யான் அதிகம் : ஒன்றுகேள்—முன்னம்
உன்பிறப்போ பத்து உயர்சிவனுக்கு ஒன்றுமில்லை
என் பிறப்போ எண்ணத் தொலையாதே''

— காளமேகப் புலவர்

ஆகையால் சிவனே முழு முதற் கடவுள் ஆதலால் அவரே ஜென்மத்தை அறுப்பவர் பவம் ஒழிக்கும் பரமனர். பஞ்சாட்சர மந்திரத்தை பலதரம் ஜெபிப்பாயாக! என்றார்.

அப்போது அங்குவந்துற்ற வைஷ்ணவ சமய மருத்துவர் கூற்றை மறுத்து பவரோகத்தைத் தீர்க்க வல்லவர் பரந்தாமனை நாராயணன் ஒருவரே அவரது திருநாமமான அஷ்டாச்சர நாராயண நாமத்தை ஜெபிப்பாயாக! பக்மாசூரனுக்கு பயந்து ஓடிய பரமசிவனுக்கு உயிர் பிச்சை அளித்தவர் பரந்தாமனை மகாவிஷ்ணுதான். விஷ்ணு ஒருவர்தான் பவரோகத்தை போக்க முடியும்.

''குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரும் செய்யும் நீழ்விசும்பருளும் அருளோடு பெருநிலமளிக்கும்
வளந்தரும் தாயினும் ஆயின செய்யும் நலம் தரும்
சொல்லை நான் கண்டு கொண்டேன் நாருயனு எனும் நாமம்''

அஷ்டாச்சரமாகிய நாராயண நாமத்தை ஜெபித்தவர் பவப்பிணி பறந்தோடும் என்றார்.

அப்போது அங்கு வந்துற்ற சாத்தேய மருத்துவர் சக்தியில்லையேல் சிவமில்லை விஷ்ணுவும் இல்லை சகல தெய்வங்களும் இல்லை.

''ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்''

என்று தியாணித்திடு. பிறவிப்பிணி ஒழிந்துபோம் மற்ற தெய்வங்களுக்கு ஜென்மத்தை அழிக்கும் சக்தி இல்லை.

"சக்தியாய் சிவமாகி தனிப்பரமுக்தியான முதலைப்-பணிவோம் எனக் கூறுவதால் பவரோகத்தை ஒழித்து முத்தியைத் தரக் கூடியவர் சக்தியே ஆகும் என வீரா-வேசத்தோடு மொழிந்தார். அப்போது கணபத்திய சமய வாதியான மருத்துவர் ஆத்திரத்தோடு அறையலுற்ருர். ஓம் என்னும் தாரக மந்திர மூர்த்தியாகிய கணேச மூர்த்தி ஒருவரே. விக்கின விநாயகர் ஒருவரே சகல விக்-கினங்களையும், ஜனன மரணதுன்பத்தையும் பவபந்தத்தை-யும், போக்க வல்லவர். சர்வமகா மந்திரங்களுக்கும் ஓம் காரமே பீஜமந்திரம் ஓம் எனும் மூலமந்திரம் இல்லாவிடில் எம்மந்திரங்களும் பயனற்றுப் போய்விடும்.

அல்லல்போம், வல்வினைபோம் அன்னைவயிற்றில் பிறந்த தொல்லைபோம் போகாத துயரம்போம்—நல்ல குணமதி!! மாமருனை கோபுரத்துள் மேவும் கணபதியைக் கை-தொழுதக்கால்" என அருணகிரியாரும் பாடியுள்ளதை உணர்ந்து பவப்பிணி நீங்க விநாயகரை தியானிக்கவேண்டும் என்று உரைத்தார்.

கௌமார மத மருத்துவர் கடுமையாகப் பேசலுற்ருர். சிவனுக்கே பிரணவத்தை உபதேசித்தவர் சிவ குருவாகிய குமரக்கடவுளாவார். பிரம்மனையே தலையில் குட்டி சிறையிலடைத்தார். திருமால் மருகன் பராசக்தி புதல்வன், ஆனை முகனுக்கு இளையோன் குமரகுருபரன் மக்களுக்கு சகல செல்வங்களையும் தருபவன். பிறவிப்பிணி யான பவரோகத்தையும் போக்கவல்லான், முருகக்கடவுளே யாகும். ஜென்ம ஜென்மாந்திரமாகத் தொடர்ந்து வரும் பவரோகம் குமரக் கடவுளால் தான் தீர்க்க முடியும் என்ருர்.

அதுசமயம் கௌரசமயவாதியான மருத்துவர் மற்ற சமயவாதிகளின் கூற்றை மறுத்து ஆதித்தனுன சூரியனே கண்கண்ட கடவுள். சூரியன் இல்லாவிட்டால் உலகமே அழிந்துவிடும், எல்லாவற்றையும் பஸ்பமாக்கும் ஆதித்தன் பவரோகத்தையும் பொசுக்கி விடுவார். எனவே சூரிய நமஸ்கார வழிபாடு செய்யின் பவரோகம் பறந்து விடும் என்று அட்டகாசமாகக் கூறினர்.

இந்தப்படியாக பலசமயவாத மருத்துவர்கள் பலவாறு-கக் கூறி தங்களுக்குள்ளே சச்சரவு இட்டுக் கொண்டிருக்கையில், பிறவிப்பிணி பீடித்த பெரும் நோயாளி'' ஐயா! சமய வாதிகளான மருத்துவர்களே! நீங்களே உங்களைப் பற்றி ஒருவருக்கொருவர் குற்றம் குறையுமாகக் கூறிக் கொண்டிருப்பதால் உங்களால் பிறவிப்பிணியைத் தீர்க்க முடியாது என்று கூறி அவர்களை விரட்டி விட்டார்.

அப்போது அங்கு ஓர் அத்வைத ஞானி ஒருவர் வரலானுர். அவரைக்கண்டு பவரோக நோயாளி அடிபணிந்து வணங்கினுர்.

''தவங்களாலும், தெய்வநீராலும், சாஸ்திரங்களிலும் போகாபவம்தனை குருவின் பாதம் பணிந்து பற்றறுக்க வேண்டும்'' என்றபடி அவரைப் பணிந்து வணங்கி நின்று அழுது சொல்வான்,

'மாயவாழ்வு எனும் சோகத்தால் வகை தெரியாது
கலங்கினேன். ஐயனே! என் துன்பமே தொலையும்
வண்ணம், பிணங்கிய பாசப் பின்னலை சன்னமாக்கி
இணங்கிய குருவே! என்னை ஈடேற்ற வேண்டும்
என்ருன்!

'பவரோகத்தை நீக்க தீவிரமாக முனைபவனுக்கு முடிவில் பிறவிப் பிணியை நீக்கும் குருவான வைத்தியர் வந்து வாய்ப்பார்' என்று பழமொழிப்படி குருவான அத்வைத

ஞானி வந்து சேர்ந்தார். தன்னைக்கண்டு பணிந்தெழுந்த பவரோக நோயாளியைப் பார்த்து, வைத்தியரான குரு அன்புகனிய நோக்கி, தன் பக்கத்திலிருத்தி, சரியான பக்குவியா எனச் சோதிக்கிறார். பவரோக மருத்துவரான குரு சகல வைத்திய சாஸ்திரங்களையும் சித்தர்கள் அருளிய மணி மந்திர ஔசத வழிகளையும் தெரிந்தவராகவும் இருந்தார். தன்னை நம்பிவந்த நோயாளியின் நோயை தீர்க்கவல்ல ஜீவ காருண்யமுடையவராகவும் அவர் விளங்கினார்

"அன்னை தன் சிசுவை ஐயன் ஆமை மீன் பறவை போலத்
தன்னகம் கருதி நோக்கித்தடவி சந்நதியிருத்தி
உன்னது பிறவி நீக்கும் உபாயமொன்றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பாயாகில் தொடர்பவம் தொலையு மென்றார்"

தன்பிணியைத் தீர்க்க வந்த வைத்தியர் இப்படி உரைத்தது கேட்ட பிறவி பிணியாளி மகிழ்ச்சியடைந்து வைத்தியரை நோக்கி வைத்தியரே! வைத்தியமுறை யாது மறியேன். நான் பல போலி மருத்துவர்களை நம்பி மிக்க அவதிக்கு உள்ளானேன்.

"வடக்குளே தெற்கும் தெற்கில் வடக்கையும் காட்டுவார் போல் உடற்குள்ளே உயிரும் அந்த உயிர்குள்ளே உணர்வும் காட்டி நொடிக்குள்ளே பவமுமகற்றி நுண்ணுணர்வாக்கி மீட்டும் விடக்குளே பிறவாவண்ணம் காத்தருள் விகிர்தா போற்றி" எனப்பணிந்து நின்ற நோயாளியை இவன் நாம் தரும் மருந்தை வேளா வேளைக்கு சாப்பிட்டு பத்தியம் காப்பான். நாம் சொன்னபடி நடப்பான் என்பதை அறிந்தபடியால்

"அடங்கிய விருத்தியானென்றறிருந்த பின் செறிந்த
குடம்பையுள் புழு முன்னூதும் குளவியின மண்ணின்
கொள்கை போலத்

தொடங்கிய குருவும் ஆன்ம சொரூபமே மருவவேண்டி
உடம்பினுட் சீவனைப் பார்த்து உபதேசம் ஓதுவாரே"
குருநாதரான அத்வைத மருத்துவர் வைத்திய சிகிச்சையை தொடங்கினர். இந்த பவரோகத்திற்கு ஞான மருந்தே நல்ல மருந்து என உணர்ந்து அதைத் தேர்ந்தெடுத்தார்

"வாராய் என்மகனே! தன்னைமறந்தவன் பிறந்திறந்து
திராத சுழல் காற்றுற்ற செத்தைப் போல் சுற்றிச்
சுற்றி
பேராத கால நேமிப் பிரமையில் திரிவன் போதம்
ஆராயும் தன்னைத்தான் என்றறியுமவ்வளந்தானே"

என நோயாளியை "மகனே" என பணிவன்புடன் மொழிந்த வைத்தியர் மீண்டும் கூறலானார்.

"தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் கண்டாலே
பின்னையும் அததலைவன் தானய் பிரம்மமாய பிறப்புத்
தீர்வார்! உன்னை நீ அறி"

குருநாதராகிய அத்வைத ஞான வைத்தியர் நோயாளிக்கு அத்வைத ஞானமாகிய ஓர் மொழி உபதேச மருந்தைக் கொடுத்து அப்பியாச சாதனை செய்யவும் குருபக்தி என்ற வைத்தியர்மேல் நம்பிக்கை என்ற பத்தியம் காக்கவும் செய்வித்தார். அதவைதம் என்னும் ஞான மருந்தால் பவரோகம் ஆதவனைக் கண்டபனி போல அழிந்து ஒழிந்து விடும். இனிப்பிறவா சாயுஜ்ய முக்திப்பதமும் சித்திக்கும் குருநாதாரன வைத்தியரின் அருள் நோக்கலும் நோயாளியின் குருவிசுவாசத்தாலும் பவரோகமாகிய பிணிநீங்கிய பின் ஆனந்தமாய் நோய் நிங்கிப் பாடலானார்.

"சிற்சபையுப் பொற்சபையும் சொந்தமெனது ஆச்சு
தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு
இப்பிறவி வாழ்வில் எனக்கு என்ன இனி ஏச்சு
என் பிறவித் துன்பமெல்லாம் இன்றோட போச்சு"

என நோயாளி அருட் பிரகாச வள்ளலாரின் திருவருட் பாவைப் பாடிக்கொண்டே ஏகிறார்.

அத்வைத ஞானமார்க்கம் பிறவி ஒழிய சுலபமான வழி யாகும் அதைத் தவச்செல்வர் தாயுமான சுவாமிகளும் தமது அனுபவத்தால் தெள்ளென விளக்குகிறார்.

"வேதமுடன் ஆகமபுராணம் இதிகாசம் முதல் வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க்கத்தையே விரிவாய் எடுத்துரைக்கும்
ஓதரியதுவிதமே அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞானமாரும்
யூகம் அனுபவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வும் ஈது உபயவாதிகள் எம்மதம்
ஆதலின் எனக்கு இனிசரியை யாதிகள் போதும்! யாதென்று பாவிக்க நான்
அதுவாதலால் உன்னை நான் என்று பாவிக்க அத்துவித மார்க்க முறலாம்
ஏது பாவித்திடினும் அதுவாசி வந்தருள் செய் எந்தைநீ குறையுண்டோ
இகம்பரம் இரண்டினும் உயிரினுக்கு உயிராகி எங்கும் நிறைகின்ற பொருளே"

இதுபோல அத்துவித ஞானமார்க்கத்தின்படி நாம் எதைப் பாவிக்கிறோமோ அதுவே ஆகிறோம்.

ஆதலின் இகபாம் இரண்டிலுனும் உயிரினுக்குயிராகி எங்கும் நிறைகின்ற சிவமே! உன்னை நான் என்று பாவிக்கிறான் நீ-நான் ஆசி-விடுகின்றாய்.

நீ நான் அதாவது அது நீ ஆதலே (தத்துமஸி) அத்வைத ஞானமார்க்கம் ஏகமாக எங்கும் அங்கிங்கென்னாத எங்கும் நிறைந்த பரம்பொருளான சிவம் உனது உடலிலேயும் உயிராகிய ஆன்மாவாக வியாபித்து நிறைந்துள்ளார். ஆதலால் உன்னை நீ அறிந்தால் அதுவே நீயாகி விடுகிறாய் என அத்வைத ஞான மார்க்கத்தில் மூலமாக உனது பலரோகத்தை—பிறவிப்பிணியை ஒழிக்க முயற்சிப்பாயாக !

எனவே, அன்பர்களே அத்வைத ஞானமார்க்கத்தின் மூலம் சுலபமாக கடினபத்தியம் இல்லாமல் இல்லறத்திலிருந்தே முக்திபெற பவரோகம் ஒழிய குருநாதரிடம் உபதேசம் பெற்று யோக சாதனை புரிவீராக!

ஓம்

தத் சத்

பவரோக நிவாரணி-ஓர் விளக்கம்!

பவரோக நிவாரணி என்னும் இக்கட்டுரை எங்களது ஞான பிதாவால், பிறவிப் பிணியைத் தீர்க்க பல தெய்வ வழிபாடுகளையும், சரியை கிரியை மார்க்கங்களிலும் ஈடுபட்டு இறுதியாக அத்வைத ஞானமே முடிவானது என்பதை உணர்ந்து பிறவா முக்தியை எய்திய ஓர் நோயாளியைப் பற்றிய வரலாறு. இக்கட்டுரை ஏறக்குறையப் பகவத் கீதையைப் போன்று பக்தி கர்ம, யோக ஞான மார்க்கங்களை விளக்குவதாக அமைந்துள்ளது.

பெரியமகான்களுக்கும், ஆன்மீகவாதிகளுக்கும், துறவிகளுக்கும் தான் பயன் படக் கூடிய ஒன்று என்றும், இல்லறத்தாருக்கும், தவறு செய்தவர்களுக்கும் குற்றம் புரிந்தவர்களுக்கும் ஓதும் தகுதி கிடையாது என்றும் கீதையைப் பற்றி தவறான கருத்து தற்போது உலக வழக்கில் மிகையாகக் காணப்படுவது போல-இக்கட்டுரையைப் பற்றியும் நாங்கள் ஞான பிதாவிடம் பலமுறை விவாதித்தது உண்டு ஆயினும் ஞான பிதா, கீதையைப் பற்றிக் கூறியது போல-கிருஷ்ணன் தனது உபதேசத்தின் மூலம் உண்மையிலேயே உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருந்திருப்பின் கீதையை அர்ச்சுனனுக்கு உபதேசிக்காமல், அவனுடைய மூத்த சகோதரனை,—தர்மத்தை அறிந்து கடைப்பிடித்து வரும் தர்மனுக்குத்தான் உபதேசித்து இருக்க வேண்டும் அதாவது கீதையானது தற்பொழுது மிக உயர்ந்த தர்மத்தைக் கடைப்பிடித்து வரும் ஒருவனுக்குத்தான் போதிக்கப்படவேண்டும் என்பது சரியான தாகக் கருதப்பட்டால் அது கீதையை அருளிய கிருஷ்ணனுக்கே உடன் பாடு அல்ல என்று தெளிவு. ஏனெனில், தர்மத்தைக் கடைப் பிடித்து வரும் ஒருவன் தர்மம், அல்லது நீதி என்றால் என்ன

வென்று தெரிந்து கொள்ளாதிருக்க முடியாது. ஆனால், கிருஷ்ணனே பரிபூரணமாக தான் செய்ய வேண்டியது என்ன வென்று அறிந்து கொள்ள முடியாத குழப்ப நிலையை அடைந்தவனும்; இதுவரை எது அவனுக்கு இயற்கையாகவும் இயல் பாகவும் இருந்தது எதுவோ அதுவே, தற்பொழுது அவனால் கடைப்பிடிக்க முடியாததாகவும். தவறானதாகவும், காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் கலங்கிய மனதை உடையவனும்; தன்னால் எதை எளிதாகவும் உண்மை யாகவும் செய்ய முடியுமோ - அதைச் செய்ய முடியாது என்று மயங்கியதுடன்; எதைத்தன்னால் கஷ்டப்பட்டுக் கூடச் செய்ய முடியாதோ – அதைச் செய்ய முடியும் என்று தவறான கருத்தைக் கொண்டவனுமாகிய அர்ச்சனனுக்குத் தான் கீதையை கிருஷ்ணன் உபதேசித்து அருளினார், போரில் பிரியமுள்ள பீமனுக்கோ அல்லது தர்மத்தைக் கடைப் பிடித்துவரும் தர்மனுக்கோ உபதேசிக்கப்படாமல் அர்ச்சனுக்கு மட்டுமே போதித்ததன் நோக்கம்–அர்ச்சுனன் தான் அச்சமயத்தில் தகுதி உள்ளவனாக இருந்தான். தகுதி யென்று இங்கே குறிப்பிடுவதானது அவனுடைய கலக்கத்தை அல்லது மயக்கத்தைக் குறிக்கும். அதேபோல்–இதுவரை எமது ஞான நூல்களில் வந்துள்ளகட்டுரைகள் சீடர்-களுக்கும் ஞான மார்க்கத்தில் ஈடுபாடு உள்ளவர்களுக்கும் எழுதப்பட்டவை. ஆனால் இக்கட்டுரை சரியை கிரியை, வழிகளில் இன்னும் அலைந்து கொண்டிருக்கும் பல தெய்வ வழிபாடு தொண்டர்களுக்காகவே எழுதப்பட்டுள்ளது.

நோய்தீர்ந்தவனுக்கும், பூரண ஆரோக்கியம் உள்ள-வனுக்கும் மருந்தினால் யாதொரு பயனும் ஏற்படாது; வியாதி உள்ள அதே சமயத்தில் மருந்துண்ண ஒப்புக்கொண்ட–வனுக்குத்தான் மருந்து பயன் தரும். அர்ச்சுனன் மோகம் அல்லது பற்று வசப்படல் என்ற நோய்க்கு ஆளாகி தன்னை

மயக்கிக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் தன்நோய்க்கு தக்க மருந்து கொடுக்குமாறு கிருஷ்ணனிடம் வேண்டிக் கொண்டதுமல்லாது இக்கட்டுரையில் வரும் பவரோகநோயாளி விகித குருநாதனிடம் தன்னை ஒப்படைத்து விட்டதைப் போல—கிருஷ்ணனிடம் அர்ச்சுனனிடம் தன்னை ஒப்படைத்து விட்டான். அவனையே பரிபூரணமாக நம்பி சரணடைந்து விட்டான் இக் காரணங்களால் தான் கீதை அர்ச்சனனுக்குப் போதிக்கப்பட்டது. இதே போன்று குழப்பமடைந்த உள்ளத்துடன் மனக்கலக்கம் கொண்டவர்களுக்காகத்தான் பலமதங்களைச் சேர்ந்தவர்களுக்கு பல தெய்வ வழிபாடுகளில் சரியை, கிரியை, போன்ற சோபன மார்க்கங்களில் இன்னும் அலைந்து திரிந்து கொண்டிருப்பவர்களுக்குத்தான் பவரோக நிவாரணி என்ற கட்டுரை குருநாதரால் அருளப்பட்டது என்பதை படித்து புரிந்து கொள்ள முடியும். ஆகவே கீதையைப் படிப்பதற்குள்ள ஒரே தகுதி என்ன வென்றால் குழப்பமடைந்தும் மனக்கலக்கம் கொண்டும், தர்மம் அதர்மம் இவைகளுக்கு பாகுபாடு தெரியாது தவித்துக் கொண்டும் இருக்கும் நிலை என்பது தான். அது போல இக் கட்டுரையும் உலகமாயையில் சிக்குண்டு உழன்று கொண்டி-ருக்கும் மனிதன் தான் பிணியை நீக்க எது மார்க்கம் என்று ஏக்கம் கொண்டிருப்பவர்களுக்காகவே எழுதப்பட்டது. கொண்டவர்களைக் உலகம் முழுவதிலும் தேடினாலும், பரிபூரண மன நிலையைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. அதனால் தான் உலகமுழுமைக்கும் ஒருசேர பயன்பட வேண்டி எழுதப் பட்டது தான் பவரோக நிவாரணி என்னும் இக் கட்டுரை. இதன் உண்மையான நோக்கம், உலக வாழ்க்கையில் துயரத்தைக் கண்டு துவண்டு போனவர்களுக்காகவும் தொடர்ந்து அறியாமையினால் பல தெய்வங்களையும் வணங்கிக் கொண்டே போய் [தனது பிரார்த்த கர்மத்தினால்

சரீரம்-பிறவி எடுத்ததை உணராமல், இறுதியில் இனிமேல் என்ன செய்வது என்று தெரியாமல் ஏங்கித்தவிப்பவர்களுக்-காகவும் "இவ்வளவு பெரியபாவங்களை செய்துவிட்டோமே; நமக்கும் முக்தி கிடைக்குமா?" என்று தடுமாறும் பாபிகளுக் காகவும், மொத்தத்தில் புல் முதல் கொண்டு மனிதன் ஈருக உள்ள எல்லா உயிரினங்களுக்காகவும் எழுதப்பட்டது தான் பவரோக நிவாரணி

ஞானக்கண் பெற்ற சஞ்ஜயரால், ஊனக்கண் இல்லாத திருதராஷ்டிரனுக்குக் கூறுவது போல-குருநாதரின் 12 ஆண்டுகால சகஜ சமாதியில் எழுந்த இக் கட்டுரை ஞான மன்ற வெளியிடாக உங்களுக்கு அருளப்படுகிறது. குருக்ஷேத்திரப் போர் ஒவ்வொரு தனி மனிதனிடமும் தொடர்ந்து இன்னும் நடை பெறுகிறது. அதில் சரீரம் தான் போர்க்களம். அர்ச்சுனன் என்பது மனிதனுடைய கலங்கிய அல்லது உலகமாயையில் சிக்கிய தெளிவற்ற மனம், கிருஷ்ணன் எனப்படுவன் மனிதனுடைய ஆன்மாவாகும ஆன்மா எதனுலும் கலக்கமடைய முடியாததுடன் மற்ற அனைத்தையும் தெளிந்து புரிந்து கொண்டதுமாகும். குருக்ஷேத்திரப் போரில் கிருஷ்ணனின் உதவி வேண்டி அர்ச்சுனனும் துரியோதனனும் வருகிர்கள். கிருஷ்ணன், நான் ஒருபக்கமும், என் படைகள் ஒருபக்கமும் இருக்கும். ஆனுல் நான் ஆயுதம் எதையும் எடுத்து போரிடமாட்டேன் என்று கூறுகிருன். துரியோதனன் கிருஷ்ணனின் படைகளை-யும் அர்ச்சுனன் போர் ஈடுபடமாட்டேன் என்று கூறிய கிஷ்ணனையும் மட்டும் அடைந்து செல்கிருர்கள். அதாவது இங்கு கிருஷ்ணன் தான் செயலின் மூலம் ஒருமகத்தான உண்மையை உணர்துகிருர். கிருஷ்ணனும்அவன் சக்தியும் வேறு வேறு என்றும், அதேசமயத்தில் ஒன்றுதான் என்றும் விளக்குகிருர். ஒருவன் விளக்கை கொண்டு செல்கிருன். மற்றவன் வெளிச்சத்தைக் கொண்டு செல்கிருன். விளக்கும்

வெளிச்சமும் ஒன்றல்ல. அதேசமயத்திப் வேறும் அல்ல ஆனுல் விளக்கு இருக்குமிடத்தில் தான் வெளிச்சமிருக்கும் விளக்கு இல்லாத இடத்தில் வெளிச்சம் இருக்கமுடியாது இருள்தான் இருக்கும் துரியோதனன் உண்மைபுரியாமல் – அறியாமை வசப்பட்டு வெளிச்சத்தை அதாவது விளக்குக்குப்புறம் பான வெளிச்சத்தை மட்டும் எடுத்துச் செல்வதாக எண்ணிக் கொண்டு இருளை அடைந்து ஏமாந்துபோகிறுன் அதாவது தன்னை உடலாகக்கருதி உடல் துன்பத்தை மட்டும் நீக்க இறைவனை நாடிச் செல்லும் பக்தனைப் போல! ஆனுல் அர்ச்சுனன் விளக்கும் வெளிச்சமும் ஒன்று தான் என்று தெரிந்து கொண்டு விளக்கை மட்டும் எடுத்துச் செல்கிறுன் இதன் மூலம் கிருஷ்ணனிடமிருந்து அவருடைய படைகள் எப்பொழுது கைமாறியதோ அப்பொழுதே துரியோ-தனனுடைய படைகளாகி விடுகின்றன. ஆகவே அப்-படைகளை துரியோதனின் சக்தி என்று தான் கருத வேண்டும். ஆனுல் கிருஷ்ணன் எங்கு உண்டோ அங்கு தனியாக யாதொரு சக்தியும் தேவையில்லை. அதே சமயததில் கிஷ்ணன் போர் புரிய வேண்டிய அவசியமும் இல்லை. இதே போன்று, பக்தி மார்க்கத்தில் பல மத தெய்வ வழிபாடுகளில் ஈடுபட்ட நமது பவரோக நோயாளி பல மருத்துவர்களை அணுகி அவர்கள் உடல் ஆன்ம சம்மந்தத்தை உணர்த்தாமல் - நோய் தீர்க்க மருந்து கொடுக்க அதனுல் தீராமல் இறுதியாக அத்வைத விகித குருவை அணுகி வேண்டி நிற்க, உடல் ஆன்ம சம்மந்தத்தை விளக்கி, பிரார்த்த கர்மத்தால் சரீரம் ஏற்பட்டதிலிருந்து இனி பிறவாதிருப்பதே பவரோக நிவாரணி என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் சாரம்.

இதனைப்படித்து சிந்தித்துப் பொருளுணர்ந்து பயன் பெறுக!

குரு வாழ்க ! குருவே துணை ! !

தொட்டியம் என
1-8-1987 அன்புக்கினிய,
T. P. சுந்தரம்